# அலை ஓசை

தமிழ் - ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

Tamil-English Science & Cultural Monthly Magazine

அலை - 3 ஐப்பசி - கார்த்திகை 1988 ஓசை - 3




ALAI-3 September-October 1988 OSAI-3

# ALAI OSAI

A FIMBRA MEMBER

With Best Compliments

from

# RAMA & COMPANY

INDEPENDENT FINANCIAL ADVISERS

For all your life assurance, pension, mortgage, re-mortgage, savings, school fees, secured personal loans, overseas residents life assurance and general insurance needs.

Please contact me for independent financial advice and personal service. V. R. RAMANATHAN

INDEPENDENT • FINANCIAL ADVISER

3 The Orchard,
Wickford,
Essex, SS12 OHB.
Tel: (0268) 766624.
(24 Hour Answering).

720 Romford Road,
Manor Park,
London E12 6BT.
Tel: 01-553-2215.
(By Appointment Only)

# அலை ஓசை
# ALAI OSAI

தமிழ் - ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

Tamil-English Science & Cultural Monthly Magazine



**EDITORS:**
*Bala Ravindran*
*K. Jeyakumar*

**ASST. EDITORS:**

**TAMIL**
*A.F. Mariathas*
*G.Meganathan*

**ENGLISH**
*Dr.T. Maheswaran*

**SCIENCE & TECHNOLOGY**
*P.Nanthacumar*

**REPORTERS**
*S.N. Raguram*
*G. Pathmanathan*


## யாருக்கு இப் போர் நிறுத்தம்?

கடந்த பல மாதங்களாக இலங்கையிலுள்ள சகல தமிழர் அமைப்புகளும் உடனடியாகப் போர்நிறுத்தத்தை மேற்கொண்டு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துமாறு ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், வீதிமறியல்போராட்டங்கள் இப்படிப்பல வழிகளில் இந்திய அரசைக் கோரியபோது தமது அசட்டுக்கௌரவத்தால் பாராமுகமாக இருந்துவிட்டு, இன்று ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தை மேற்கொண்டு இருப்பது கேலிக்கூத்தாகும். மாகாணசபைத்தேர்தலை நடாத்துவதற்கான இத்தற்காலிகப் போர்நிறுத்தம் எந்தத் தமிழருக்குத்தான் மனநிறைவையும், நிம்மதியையும் உண்டாக்கும்.

தமிழரின் பிரச்சனைத்தீர்த்து அங்கு மாகாணசபையை உருவாக்கிவிட்டோம் என்று இந்தியா வெளிநாடுகளுக்கு தம்பட்டமடிக்க முயல்கிறது.

புலிகளை கொன்றுவிட்டோம், அழித்துவிட்டோம் என்று கூறிக்கொண்டே அப்பாவிப்பொதுமக்களை கொன்றும், கொடுமைப்படுத்தியும், அழித்தொழித்துக்கொண்டு, அதிகாரப்பரவலாக்கலற்ற மாகாணசபையை வலுக்கட்டாயமாக உருவாக்க முயல்கிறது. இது எவ்வழிகளில் தமிழர்களுக்கு நிரந்தரமான விடிவை ஏற்படுத்தப்போகின்றது?

காலம்கடந்து விட்ட இந்நேரத்திலாவது இந்தியா தனது போக்கை மாற்றிப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஈழத்தின் நிரந்தர அமைதிக்கு வழிகோல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

— ஆசிரியர் —


All right reserved. No part of this publication may be reproduced without prior written permission of the publisher. The publisher cannot accept any responsibility for claims or error articles, programs or advertisements published. The opinions expressed on the pages of this magazine are those of the authors and do not necessarily represent those of the authors and do not necessarily represent those of the publisher WALTHAM FOREST THAMIL SANGAM.


## HOW TO SUBMIT ARTICLES:


Readers are welcome to write to **ALAI OSAI** publication. Please send your articles to: **THE EDITOR, ALAI OSAI, 109 Philip Lane, Tottenham, London N15 4JR.**


*PUBLISHERS: WALTHAM FOREST THAMIL SANGAM, 11 Violet Road, Walthamstow, London E17 8HZ. Tel: (01) 539 7747*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலண்டன் ஸ்ரீமுருகன் தேர் உற்சவம் | 3 |
| 2. | ஒரு இலாபம் ஒரு நட்டம் (சிறுகதை) | 5 |
| 3. | கவியரசர் காளமேகப் புலவர் வாழ்வில் ஓர் சம்பவம் (கட்டுரை) | 9 |
| 4. | அரசியல் அதிர்வேட்டுக்கள் | 11 |
| 5. | A.B.C மயில்வாகனத்தார் (நகைச்சுவை நாடகம் காட்சி-1) | 13 |
| 6. | SCIENCE & TECHNOLOGY<br>I. Current News<br>II. Health Food<br>III. Question & Answer | 15 |
| 7. | தரணியெலாம் புகழ்பரப்பும் கணிதவல்லுனன் கணேஷ் சிற்றம்பலத்துடன் சிறப்புப் பேட்டி | 20 |
| 8. | இது நம்ம ஆளு (சினிமா விமர்சனம்) | 22 |
| 9. | உதவி (சிறுகதை) | 23 |
| 10. | பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சி | 25 |
| 11. | இலங்கையும் இந்துசமுத்திர நாடுகளும் (ஆய்வுக்கட்டுரை) | 27 |
| 12. | சிறுவர் களஞ்சியம்<br>I. தந்திர வியாபாரி (சின்னஞ் சிறு கதை)<br>II. My Tamil School<br>III. My Pen Pal<br>IV My Garden | 31 |
| 13. | குறுக்கெழுத்துப் போட்டி | 33 |
| 14. | மங்கையர் மஞ்சரி | 34 |
| 15. | வாசகர்கள் எழுதுகிறார்கள் | 35 |
| 16. | பிர(ே)மை (சிறுகதை) | 36 |
| 17. | ஸ்ரீ மாணிக்க விநயகர் ஆலயம் | 39 |
| 18. | தலைவர்கள் பார்வையில் | 40 |

# இலண்டன் ஸ்ரீமுருகன் தேர் உற்சவம்



பரம்பொருளான சிவபெருமானின் பெருங் கருணையினால் படைக்கப்பட்ட இவ்வுலகின் பல பாகங்களில் அந்தந்த சூழ்நிலைக்குத் தக்கவாறு இறை வழிபாட்டு முறைகளும் சமய உணர்ச்சிகளும் அமைந்திருக்கின்றன. இத்தகைய சமயங்கள் பலவற்றுள் பழம் பெரும் புகழ் வாய்ந்ததும் இந்தியாவில் தோன்றி உலகின் மற்ற பாகங்களிலும் விரிவடைந்து இருக்கின்றதுமான இந்துமதம் மிகவும் சிறப்பு மிகுந்தது. இம்மதத்தில் இறை வழிபாட்டு முறைகள் அறு வகை சமயங்களாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. சைவம், வைணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் எனப்படும் ஆறு சமயங்களுள் கலியுக தெய்வமாய் விளங்கி, வழிபடும் அடியார்களுக்கு வரமளித்து அருள்புரியும் செந்தமிழ்க்கடவுள் முருகப் பெருமானை முழுமுதற் கடவுளாக வைத்து வழிபடும் முறைக்குக் கௌமார வழிபாடு எனப்பெயர்.

தாய் நாட்டின் முன்னேற்றைக் கருத்திற் கொண்டு கடல் கடந்து வாழும் தமிழர்கள் சென்ற இடந்தோறும் தமிழையும் தமிழ்த் தெய்வங்களையும் மனதில் இருத்தி வழிபடுமுகமாகத் தமிழ்ச் சங்கங்களையும் தெய்வத்திருக் கோயில்களையும் அமைத்துத் தமிழை வளர்த்துத் தெய்வத்தை வணங்கி மகிழ்ந்தார்கள். இத்தகைய முறையில் மேற்கத்தைய நாடான இங்கிலாந்தில் லண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் (ஈஸ்ட்ஹாம்) மனோபார்க் என்றுமிடத்தில் பக்தப் பெருமக்களின் பேரவாவினாலும் ஒத்துழைப்பினாலும் தொடங்கப்பட்டு இன்றைய தினம் லண்டன் நகர் இந்துப் பெருமக்களனைவரும் தினந் தோறும் வந்து வழிபட்டு மகிழும் வண்ணம் உயர்ந்து நிற்பது லண்டன் ஸ்ரீமுருகன் கோயிலாகும். இத்திருக்கோயிலில் நாடி வரும் வரும் அடியார்கள் துயர் தீர்த்துக் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் குமரக் கடவுளுக்கு நடைபெறும் திருவிழாக்களில் முதன்மையானது இரத உற்சவம் எனப்படும் தேர்த்திருவிழாவாகும். சிங்கார வேலனை கந்தப்பெருமான் பொன்னகைகளாலும் மலர்மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு தேவியர் இருவருடன் வீற்றிருக்கும் சிங்காரத்தேரை, பக்தர்கள் எல்லோரும் ஒன்று கூடி முருகன் புகழ் பாமாலைகளைப் பாடிக் கொண்டு லண்டன் வீதிகளில் இழுத்து வரும் காட்சி அற்புதமானதாகும். இத்தகைய சிறப்புமிகு லண்டன் ஸ்ரீமுருகன் கோயில் தேர்த்திருவிழா இவ்வாண்டு ஆவணி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கோலாகலமாக நடைபெற்றது.

தேர் உற்சவத்தின் தொடக்கமான கொடியேற்ற விழா 19.08.88 அன்று மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமையாதலால் பக்தப்பெருமக்கள் ஆலயமெங்கும் நிறைந்திருக்க, யாகசாலை பூஜை ஹோமம் நடாத்தப்பட்டு வசந்த மண்டப பூஜை செய்து சுவாமி புறப்பாடாகி, முருகன் சந்நிதியில் புதிதாக நாட்டப்பட்ட கொடிமரத்தின் அருகில் வந்தவுடன் கொடியேற்றத்திற்கான பேரீதாடனம் முதலிய வழிபாடுகளைச் செய்து முடித்து சுப்பிரமணிய சுவாமியின் வாகனமான வண்ணமயிலின் உருவம் பொறிக்கப்பட்ட கொடியினை ஆலய அர்ச்சகர்கள் ஏற்றி வைத்தார்கள். தொடர்ந்து 9 நாட்களிலும் தினசரி யாக பூஜையும் சுவாமி புறப்பாடும் நடாத்தப்பெற்றது. நடுவில் 5ம் திருநாள் உற்சவத்தன்று மயில்வாகனக் காட்சி மிகவும் அழகாக அமைந்து பக்தர்களுக்கு மன மகிழ்ச்சியை அளித்தது. 10ம்திருநாள் உற்சவ--மான திருத்தேர் விழாவை முன்னிட்டு முதல்நாளே தேர் அலங்காரம் செய்வதில் அன்பர்கள் பலர் ஈடுபட்டு மிகவும் அழகாகக் கண்ணைக் கவரும் வகையில் தேரை அலங்கரித்து முடித்தார்கள். அதே போல் உற்சவ மூர்த்தியான சுப்பிரமணிய சுவாமிக்கு ஆலய சிவாசாரியார்கள் பட்டாடைகள், நகைகள், மற்றும் வண்ண வண்ண மலர்மாலைகளாலும் அலங்காரம் செய்தார்கள்.

காலை 8 மணிக்கு மூலஸ்தான முருகப்பெருமானுக்கு விசேட அபிசேகம் செய்து அலங்காரம் முடிந்தவுடன் தினசரி பூஜை நடாத்தப்பட்டு வசந்த மண்டப பூசை தொடங்கப்பெற்றது.

ஒலிபெருக்கியால் மங்கல நாதஸ்வர இசை முழங்க பக்தர்கள் உள்ளம் உருகி முருகன் நாமாவளிகளைச் சொல்ல அர்ச்சகர்கள் கணீரென்று வேத மந்திரங்கள் ஓத, சிங்கார வேலனை முருகன் வள்ளிதேவசேனாசமேதராக தேருக்கு எழுந்தருளியவுடன் தேருக்குப் பூஜைகள் நடாத்தப்பட்டு பூசணிக்காய் உடைத்து ஆரத்தி காட்டி எல்லோரும் இணைந்து தேரின் வடம் பிடிக்க சரியாகப்

பத்து மணியளவில் திருத்தேர் புறப்பட்டது. சுமார் 2,000 ற்கும் அதிகமான பக்தர்கள், கலந்து கொண்ட இவ்விழாவில் லண்டன் நகரக் காவலர்கள் பத்துப்பேர் போக்குவரத்தை ஒழுங்கு செய்து தேரோட்டத்திற்கு மிகவும் ஒழுங்கு செய்தார்கள். வீதிகளிலுள்ள இந்துக்கள் தத்தம் வீடுகளில் சுவாமியின் கடாட்சம் பெறும்முகமாக தேங்காய், பழம், மலர்த்தட்டுக்களை ஏந்தி வந்து அர்ச்சனை செய்து தரிசித்து மகிழ்ந்தார்கள். தேரைக் கண்டு வியந்த அன்னிய நாட்டு மக்கள் உண்டியல் குலுக்குபவர்களை அழைத்து காணிக்கைகளைச் செலுத்திக் கைகள் வழக்கப்படி வணங்கினார்கள். தேரோட்டத்தினத்தன்று மழையில்லாமலும் அதிக வெய்யிலில்லாமலும் இருந்தது பக்தர்களுக்கு மிகவும் சௌகரிகமாக இருந்தது.

ஆலயத்திலிருந்து புறப்பட்ட தேர் பல வீதிகள் வழியாக வலம் வந்து சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ஆலய வாசப்பை வந்தடைந்தது. அங்கு தேருக்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸ் அதிகாரிகளுக்கு மரியாதை செய்யப்பட்டு முடிந்தவுடன் தேரிலிருந்து சுவாமி இறக்கப்பட்டு ஆலயத்திற்கு ஆடி ஆடி வந்த காட்சி மனதை மிகவும் நெகிழ்த்துவதாக அமைந்தது. இந்த நேரத்தில் வானத்திலிருந்தும் பன்னீர் தெளிப்பது போல் இரண்டொரு மழைத்துளிகள் விழுந்தது குறிப்பிடத்தக்கது.

தேரோட்டம் முடிந்து முருகன் ஆலயத்திற்கு வந்தவுடன் மகாபிரசாகம் நிவேதனம் செய்யப்பட்டு தீபாராதனை முடிந்து பக்தர்களுக்கு விபூதி, குங்கும பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அர்ச்சனை நடாத்தப்பட்டது.

தேர்த்திருவிழாவை முன்னிட்டு காலையிலேயே வருகை தந்த பக்தர்களுக்கு தேரோட்ட விழா முடிந்ததும் அருமையான அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அருட் பசிக்கு ஆண்டவனை வணங்கி மகிழ்ந்த அன்பர்கள் வயிற்றுப் பசிக்கு ஆண்டவன் பிரசாதத்தை உண்டு களித்தார்கள்.

தேர்த்திருவிழாவின் அங்கமாக மூன்று மணியளவில் குச்சுப்புடி நடனக்கலையில் புகழ் பெற்ற கலைஞர் திருமதி. காமினி. காளிதாஸ் அவர்களின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. திரளான மக்கள் இருந்து நடனத்தைக் கண்டு களித்தனர்.

மாலையில் ஸ்ரீ உற்சவ மூர்த்தி சுப்பிரமணிய சுவாமிக்கு பிராயச் சித்த அபிடேகம் செய்து பச்சை புறப்பாடு நிகழ்ந்தது. ஆண்டவனுக்குப்பச்சைப்பட்டு, நகைகள், பச்சை இலைகள், மயில் தோகை இவ்வாறு பச்சை வர்ணத்திலேயே சாற்றிச் செய்யப்பட்ட

இவ்வலங்காரம் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. உற்சவத்தின் பூர்த்தியாக 29.9.88 திங்கள்கிழமை காலை தீர்த்தவாரி உற்சவமும் பாலிகை விடுதலும் நடாத்தப்பட்டது. சன்னதிக்கெதிரே திறந்த வெளியில் பெரியதான தண்ணீர்த் தொட்டியில் நீர் நிறைத்து வைத்து சுவாமி புறப்பட்டு வந்தவுடன் வேலுக்கு அபிசேகம் செய்து, அர்ச்சகர் அந்த

வேலை வைத்துக்கொண்டு ஸ்நானம் செய்தவுடன் புனித தண்ணீர் பக்தர்களுக்குத் தெளிக்கப்பட்டது. சுவாமி ஆலயத்திற்குள் வந்தவுடன் திருவாசகம் பாடிப் பொற்சுண்ணம் இடிக்கப்பட்டது. 10 நாட்களில் வைத்துப் பூஜை செய்த பாலிகைகளைப் பெண்கள் அனைவரும் சென்று நீரில் கரைத்தார்கள். பாலிகை கரைத்த பெண்கள் ஒன்று கூடி வளையமாகக் கும்மியடித்து ஆடியது வேடிக்கையாகவும் நமது கலாச்சாரத்தை நினைவுபடுத்துவதாகவும் இருந்தது.

அன்று மாலை கொடியிறக்கப்பட்டு ஊஞ்சல் உற்சவம்மிக அழகாக நடந்தது. திரளான மக்கள் வந்திருந்து அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் ஆண்டவனை வைத்து ஆட்டி ஊஞ்சல்ப் பாட்டுக்களையும் முருகன் பாமாலைகளையும் பாடி மனமகிழ்ந்தனர்.

தேரோட்டத்தை முன்னிட்டு வந்த பக்தர்கள் அனைவருக்கும் தேவையான வசதிகளை ஆலயப் பொறுப்பாளர்களும் நிர்வாக சபையினரும் சிறப்பாகச் செய்திருந்தார்கள். ஆலயத்தில் இன்னும் பல திருப்பணிகளைச் செய்யவிருக்கும் அவர்களுக்கு நாமெல்லாம் உதவிகள் பல செய்து லண்டன்ஸ்ரீமுருகப் பெருமானின் பேரருளைப் பெற்று வாழ்வோமாக.

–முருக பக்தன்–



கண்டக்டர் :– புத்தகச் சுமைகளோடு பஸ்ஸில் ஏறும் மாணவர்களைப் பார்த்து, அந்த நாட்களிலை நாங்களும் இரண்டு கொப்பியோடை படிச்சுப் போட்டு வந்தனாங்கள். இப்ப இவையென்னடாவெண்டால் சூட்கேசு காவிக் கொண்டு திரியினம்.

மாணவன் :– அந்த நாளிலை 2 கொப்பி காவினகாலை தான் இப்ப அந்தரத்திலை நிண்டு உந்த வேலை பார்க்கிறியள்.

– மங்களா –

# ஒரு இலாபம் ஒரு நட்டம்

சிறுகதை

வழமைக்கு மாறாக எனது தொலைபேசி பலமுறை அலறிக்கொண்டிருந்தது. விடிந்ததற்கு இது ஏழாவது முறையாக இருக்க வேண்டும். வேலைக்குப் போகாததைப் பற்றிக் கேட்க மனேஜர் அடித்திருக்க வேண்டும், அல்லது நண்பர்கள் யாராவது வேலைத்தளத்திலிருந்து ஓசிப் போனில் அரட்டையடிக்க எடுத்திருப்பார்கள். என்னால் எதையும் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை... மீண்டும் புரண்டு படுக்கிறேன். சிறிது நேரத்தின் மறுபுறம் புரள்கின்றேன். எல்லாம் அசௌகரிகமாகத்தான் இருக்கின்றது. கண் நிறைந்த நித்திரையாக இருக்கின்றது. ஆனால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. அங்குமிங்குமாகப் பல கடந்த கால நிகழ்ச்சிகள் என் நினைவில் தோன்றி மறைகின்றன.. நிதானத்துடன் நினைத்துப் பார்க்க ஒரு நிகழ்ச்சியா? இரண்டு நிகழ்ச்சியா?.. அந்த இனிமையான சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதை விட நான் இங்கிருந்து வேறு என்ன தான் செய்து விட முடியும்?..

மீண்டும் தொலைபேசி அலறுகின்றது. இந்தமுறை ரிசீவரை எடுத்து கீழே வைக்கிறேன். என்னுடன் சேர்ந்து என்னுடைய தொலைபேசியும் அலறவேண்டாம்.

ஒலிம்பிக் பந்தயத்தைவிட மோசமான இலங்கைப்பல்கலைக்கழகத் தேர்வுப் பந்தயத்தில் நான் மூன்றுமுறை ஓடிக் களைத்துவிட்டு இயலாத நிலையில் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த காலம்.., இற்றைக்குப் பத்து வருடத்திற்கு முன்பு.. அட எல்லோரும் தானே காதலிக்கிறார்கள், அப்படி முடியாவிடினும் காதலிக்க முயற்சியாவது செய்கிறார்களே, நானும் காதலித்தால் என்ன என எண்ணும் காலமது, எந்தவித உணர்ச்சியோ, முன்யோசனையோ இன்றிச் சாதாரண 'திரிலுக்காகக் காதலிக்க நினைத்த அந்தக் காலத்தில் எனது கண்ணுக்குள் தென்பட்டவள் அந்த ரதி தான், பாவம் அதற்கு அவள் என்ன தான் செய்யமுடியும்'.

நான் அவளைப் பார்க்க அவள் மண்ணைப் பார்க்க, நான் மண்ணைப்பார்க்க அவள் என்னைப்பார்க்க, பின் பார்வைகள் சந்திக்க மீண்டும் இருவரும் நிலத்தைப்பார்க்க.... நான் எனக்குள்ளேயே அவள்மீது ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொள்ள, யார் தமது காதலை எப்படித் தெரிவித்துக் கொள்வது என எமக்குள்ளேயே பிய்த்துக் கொள்ள எல்லோருக்கும் கைகொடுக்கும் காதல்கடித முறை தான் எனக்கும் கை கொடுத்தது. ஏனைய பெண்களைப் போல் அவள் சிலகாலம் எனது காதலை வெறுப்பது போல் பாசாங்கு செய்ய, நானும் எனது அநுபவக்குறைவால் அவள் என்னை வெறுக்கிறாள் என எண்ணித் தாடி வைத்துக் கொள்ள முயற்சிக்க, ஆண்களின் பலவீனத்தை வைத்தே அவள் என்னை ஆட்டிப்படைத்துக் கடைசியில் அவளும் எனக்குக் கடிதம் எழுதத் தொடங்கினாள்.

எமது காதல் எவ்வித சகுனமுமின்றி இனிமையாக வளர்ந்து கொண்டிருந்த ஒரு நாள்..., அந்த நாள் நேற்று நடைபெற்ற ஒரு சம்பவம் போல் இன்றும் பசுமையாகவே ஞாபகமிருக்கிறது. ரதியின் தந்தை தற்செயலாக பஸ்ஸில் எனக்கு முன் தென்பட்டார். என்னுடைய கெடுகாலமோ என்னவோ எனக்கருகில் ஒரு ஆசனம் வெறுமையாக இருக்க ஓர் கடுமையான சிரிப்புடன் வந்து இருந்தார். நெஞ்சு படபடக்க ஓர் வலியல் சிரிப்பொன்றை உதிர்த்துக் கொண்டேன். கல்லூரி அதிபர்களைப் போல் அந்தச் சிரிப்பை ஏற்றுக் கொள்வதைப் போல் தலையசைத்தார். அவரின் சிரிப்பிலும், தலையசைப்பிலும் கோபமும் கடினமும் இருந்ததோ இல்லையோ தெரியாது. ஆனால் அன்று இருந்ததுபோல தான் எனக்குத் தோன்றியது.

மற்றய தரிப்பில் இறங்கிவிடுவோமோஎன்றுகூட யோசித்தேன். சீ, அது மரியாதை இல்லை, நான் ஏன் பயந்து இறங்கவேணும்?" எனக்குள் ஓர் அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். ஏதோ ஓர் பெரிய ரசிகனைப் போல் வெளியில் இயற்கைக் காட்சிகளை ரசிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டேன். ஓர் அழகான கன்னிப் பெண்ணிற்கு அருகில் இருப்பதைப் போல் நாணிக்கோணி இருந்த என்னை "டெக்கினிக்கல் கொலிஜில் என்ன படிக்கிறீர்" என்ற குரல் திக்குமுக்காட வைத்து விட்டது. திடுக்கிட்ட எனக்கு சுயநினைவே இருக்கவில்லை.

"என்ன?... என்ன?...

"டெக்னிக்கல் கொலிஜில் என்ன படிக்கிறீர் என்று கேட்டன்" மிகவும் அழுத்துறுத்து மீண்டும் கேட்டார். அவருடைய பொறுமையைச் சோதியாமல் சடாரென "லேத்மெஷின்ஒப்பேரேட்டிங்" என்றேன்.

"தம்பிக்கு எத்தனை வயது நடக்குது?"

"பதினெட்டு முடிஞ்சு..." நான்சொல்லி முடிப்பதற்குள் "தம்பிக்கு இந்த வயதிலை கல்யாணம் எல்லாம் தேவைப்படுதோ?" என்றார். "கலியாணம்... என்ன என்னையறியாமல் என் வாய் ஏதோவெல்லாம் உளறியது. ஓடும் பஸ்ஸிலிருந்தே கீழே குதித்தால் என்ன என்று கூட யோசித்தேன். "என்ன சொல்லுறியள்?"

"இல்லை இந்த வயசில பொம்பிளை தேவைப்படுதோ என்று தான் கேட்டனான்" கொஞ்சம் உபாசமாகவே கேட்டுவிட்டார். ஒன்றும் தெரியாத அப்பாவியைப்போல் பாவனை செய்து கொண்டு அவரின் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். அவரின் கண்களை பார்க்க சக்தியற்று தலையை குனிந்து கொண்டேன். அவர் தொடர்ந்தார். "எந்தப் பெற்றோரும் தன் பிள்ளையை ஒரு நல்ல பண்புள்ள படித்தவனுக்குத்தான் கட்டிக் கொடுக்க விரும்புவான். அப்படி நீரும் படித்து நிரந்தரமாக வேலையில் இருந்தால் யோசிக்கலாம்.." அதைவிட்டு விட்டு இந்த வயசிலை இப்பிடி அலையிறது அவ்வளவு நல்லாயில்லை. என்ன நான் சொல்லுறது விளங்குதே?" "ஓம் சரி" என்றேன்.

நான் மிகவும் குழம்பியே போய்விட்டேன், எனினும் ஓர் நிதானமான தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ரதியின் தகப்பன் கதைத்த விதம் எனக்கு மிகவும் நம்பிக்கையளித்தது.

அவர் என்னிடமிருந்து ஓர் அளவான படிப்பையும், நல்ல நடத்தையையும் எதிர்பார்க்கிறார் என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

அவளை அடைவது திண்ணமாக இருந்தால் இவையொன்றும் எனக்குப் பெரிய பிரச்சனையில்லை. பல இளசுகள் செய்வதைப் போல் காதலுக்காக எல்லோரையும் பகைத்துக் கொண்டு படிப்பும் வேண்டாம் என்று வந்தவள் பின் செல்லும் மடமை எனக்கில்லை. எனக்குக் கடந்து வந்த உறவுகளும் தொடர வேண்டும், வரத்துடிக்கும் உறவுகளும் கைகூட வேண்டும். இங்கு வெறும் உணர்ச்சிக்கும் இளமைத்துடிப்புக்கும் இடம் கொடுப்பேனாகில் நான் என் ரதியை இழக்க வேண்டிய நிலை கூட ஏற்படலாம். இவையெல்லாம் என்னைப் பொறுத்த விடயங்களாகவே இருந்தது.

இதன் பின் ஆலயத்திலும் வீதியிலும் பல தடவைகள் அவளைக் கண்டிருக்கிறேன். ஓரக்கண் பார்வையுடன் கூடிய அவள் சிரிப்பு அவளுடன் பேச முடியாமல் இருக்கின்றதேயென்ற மனக்கஸ்டங்களையெல்லாம் நீக்கி விடும். இந்த வேளையில் தான் இராணுவக் கெடுபிடிகளால் தமிழ் இளைஞர்கள் வேறு நாடுகளுக்கு சிதறி ஓடிக் கொண்டிருந்த காலம்... பலர் இருபதாயிரம் முப்பதாயிரம் என்று காணி நகைகளை ஏஜென்சிகளிடம் பணத்தைத் தாரை வார்த்துக் கொண்டிருந்த போது எனக்கு இலவசமாகவே ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. லண்டனில் இருக்கும் எனது உறவினர் ஒருவர் நான் இங்கு வரும் பட்சத்தில் தான் உதவி செய்வதாக அப்பாவுக்கு வாக்குக் கொடுத்தார். படிப்பை முடித்து விட்டுப் போகிறேன், தையில் போகிறேன், அக்காவின் கலியாணத்தைப் பார்த்து விட்டுப் போகிறேன் என எத்தனையோ கதைகளை வீட்டில் விட்டுப்பார்த்தேன். ஒன்றும் வாய்க்கவில்லை. நாளுக்கு நாள் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகள் மோசமாக எனது வெளிநாட்டுப் பயணமும் உறுதியாயிற்று. எனக்கோ இந்தப் பயணத்தில் துளிகூட விருப்பமில்லை.

பயணம் போவது முடிவு செய்யப்பட்ட அந்த ஞாயிற்றுக்கிழமை நாள் நான் அவளுடன் பேச வேண்டுமெனத் தீர்மானித்தேன். வாழ்நாளில் மறக்கமுடியாத அந்த ஞாயிறு.. நான் லண்டன் போவது தொடர்பாக நாளைக் கூறுமுன்பே அவள் தெரிந்து கொண்டதை அவளுடைய சிவந்த கண்கள் எனக்குப் பறை சாற்றின. ஆலயத்தின் தூண் ஒன்றில் சாய்ந்த படியே காலொன்றை ஊன்றிக் கொண்டு நான் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கோ பேசுவதற்கு வார்த்தைகள் வெளியாகவில்லை. யாரோ குரல்வளையை நெரிப்பது போன்ற உணர்வு. "கொழும்புக்கு விடியப் போறன். பெரும்பாலும் வெள்ளிக்கிழமை பிளேன்"...

இருவருக்கும் மத்தியில் நீண்ட மௌனம். சிறு இடைவெளியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன். நகத்தைக் கடித்தபடி எதையோ கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் நீர் முட்டியிருந்தது. "நான் அங்க கனகாலம் நிற்க மாட்டன், உம்மைப் பிரிஞ்சு நான் எங்கு சரி இருக்க மாட்டன்!!



"என்ன, ஏதாவது கதையுமன்..."

"ஏன்.. என்னோட இனிக் கதைக்கவே கூடாது எண்டு தீர்மானிச்சுட்டீரோ?"

விம்மல் கேட்டு அவளைப் பார்க்கின்றேன். அவள் பேச வந்த அவ்வளவு வார்த்தைகளும் கண்ணீராகவே வெளிவந்தது. அதற்கு மேல் என்னால் அங்கு நிற்க முடியவில்லை.

" சரி, ரதி, நான் போயிட்டு வாறன்".

பதிலுக்குக் காத்திராமல் சிறிது தூரம் சென்று விட்டுத் திரும்பி ஒரு முறை கடைசியாக அவளைப் பார்த்துக் கொள்கிறேன். அந்த அழுகையின் மத்தியிலும் அவள் ஓர்புன்சிரிப்புடன் விடை கொடுத்தாள். அவள் அழுகிறாளா அல்லது சிரிக்கிறாளா? அவள் சிரிக்கும் போது தான் அழகென்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவள் அழும் போதும் அழகாகத் தான் இருக்கிறாள்.

அந்த விமானம் கூட 'ரதி' என்ற ஓசையுடன் எழுவது போலவே எனக்குக் கேட்டது. விமானம் தூர விலகிச் செல்லச் செல்ல நாம் இருவரும் உறவில் நெருங்கிக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

நான் இங்கு வந்த அந்த நான்கு வருடத்தினுள் ஊரில் இடம்பெற்ற அரசியல் கொந்தளிப்புக்கள் என்னை மீண்டும் அங்கு செல்ல வைக்குமா என்ற வேண்டாத கேள்வியைக் கூட என்னுள் எழ வைத்துள்ளன: நான் பல தடவைகள் என்னுள்ளேயே நினைத்திருக்கின்றேன். "நானும் ரதியும் இணைவதற்கு நாமிருக்கும் தூரம் தடையாக இருந்தால்..." இல்லை. அப்படி நடக்காது. நடக்கவே கூடாது.

நான் லண்டனுக்கு வந்த ஆரம்ப காலங்களில் கிழமைக்கொன்றாக வந்த அவள் கடிதம் காலப்போக்கில் மாதத்திற்கொன்றாகிப் பின் மூன்று மாதத்திற்கொன்றாகிக் கடைசியாக அவளிடமிருந்து கடந்த 9 மாதங்களாக ஒரு தொடர்புமில்லை. எனது கடிதங்கள் குப்பைக்கு இரையாகியதா, அல்லது திட்டமிட்டு மறைக்கப்பட்டதா? ஒன்றும் புரியவில்லை.

-ம.ப.பா-

வாழை போல் தபாற்காரனின் சத்தம் கேட்டவுடன் ரதியின் கடிதம் வந்திருந்தாலும் என்றொரு சபலத்துடன் ஓடிய போது வாழை போல் ஏமாற்றந் தான்...
அதே சமயம் என்னுடைய நீண்ட கால நண்பன் ஒருவனிடமிருந்து கடிதமொன்று வந்திருந்தது. என்னை நிலை குலைய வைத்த அந்தக் கடிதம்... நம்ப முடியாமல் திருப்பித் திருப்பிப் பல முறை வாசித்த போது மனப்பாடமாகவே இருக்கின்றது.
"ரதியைப் பெண் கேட்டு அவர்களின் கிட்டடிச் சொந்தக்காரர் யாரோ சென்றுள்ளதாக அறிகிறேன். அவர் கொழும்பில் ஆசிரியராக இருக்கிறார். அவர்கள் சீதனம் இல்லாமலே கலியாணம் செய்யச் சம்மதிக்கின்றார். பெற்றோருக்கு உற்சாகத்தை ஊட்டியிருக்கின்றது. நீ ஓரிரு மாதங்களில் இங்கு வந்து அவளைக் கலியாணம் கட்ட முடியுமென்றால் இதைத் தடுக்கலாம். ஆனால் அகதி அந்தஸ்தில் இருக்கும் நீ இப்படிச் செய்ய முடியாது என்று தான் நான் நினைக்கின்றேன். ரதிக்குப் பின் அவளிற்கு மூன்று தங்கைகள். ரதிக்கே 26 வயதாகின்றது. இந்த விடயத்தைப் பற்றி யாரையும் குறை கூறிப் பயனில்லை. நடந்தவற்றை எண்ணி ஒன்றும் யோசிக்க வேண்டாம். விதியென்று ஒன்று இருந்தால் அதை யாரால் தடுக்க முடியும்.

யாரால் தடுக்க முடியும்....
ஐயோ இதை யாரால் தடுக்க முடியும்? நிச்சயமாக என்னால் அல்லவே அல்ல. ஆனால் அழாமலும் இருக்க முடியவில்லை. ரதி, நீ கூட இந்தக் கலியாணத்திற்குச் சம்மதித்து விட்டாயா? உன்னைக் கேட்டாற்தானே நீயும் அபிப்பிராயம் தெரிவித்து இருப்பாய். எங்களுடைய கலாச்சாரங்களில் பல சந்தர்ப்பங்களில் பெண்கள் வெறும் பொம்மைகள் தானே? சரி அப்படி இல்லாமல் நீ இந்தத் திருமணம் நடக்கக் கூடாதென்று எதிர்த்திருந்தால்... 'ஆம்' என்ற ஆயிரம் குரலினுள் 'இல்லை' என்ற உனது மென்மையான குரல் நசியுண்டு இறந்திருக்கும். ஆணாகப் பிறந்த நானே இங்கிருந்து செய்வதறியாது அலறும் போது பாவம் பெண் நீ என்ன செய்வாய்?

மௌனம், இது சம்மதத்தின் அறிகுறி என்பது பலருக்குத் தெரியும். ஆனால் இது இயலாமையின் அழுகுரல் என்பது யாருக்குப் புரியும்???

நான் இங்கு வரும் போது இதுவெல்லாம் நடக்குமென்று துளி கூட நினைக்கவில்லை. ஓயாத மழை போற் தொடரும் அரசியற் கொந்தளிப்புக்கள் எம்மண்ணில் எப்போது அடங்கப் போகின்றது? அரசியல் அகதி என்ற முத்திரை எம் கண் முன்னாலேயே எமது சொந்த பந்தங்களையெல்லாம் பல வழிகளில் பறித்துச் செல்கின்றதே....


விரக்தியான இந்த நிலை இன்னும் எவ்வளவு காலம் எமக்குத் தொடரப் போகின்றன... இன்னும் எத்தனை பேருக்கு எத்தனை உறவுகள் அவர்களுடைய கண் முன்னாலேயே பறிக்கப் படப் போகின்றன.

எந்தப் போர்வையினுள்ளும் வெளிநாடுகளில் இருக்கும் நாம் உயிர் பயத்தில்லாமல் இருக்கக் கூடியது லாபம்தான்.. ஆனால் நாம் இங்கிருக்க எமது மண்ணும் உறவுகளும் சிதையுண்டு எமது கண் முன்னாலேயே பிரிவதைப் பார்க்கும் போது தான் நாம் உயிருடன் இருந்தும் என்ன பயன் என்று சிந்திக்கத் தூண்டுகிறது...

நாம் இங்கிருப்பது ஏதோ ஒரு விதத்தில் லாபம்தான். ஆனால் இன்னொரு விதத்தில் அதுவே நட்டம். ஆனால் என்னைப் பொறுத்த விடயத்தில் இந்த லாபம் என் நட்டத்தை ஈடு செய்யவில்லை.

(பெயர்கள் சம்பவங்கள் கற்பனையே)

காயத்திரி . கொன்ஸ்டன்ரைன்



# *WICKS*

## *GENERAL TRADING ENTERPRISES*

**** THINKING OF BUYING A HOUSE**

**** FIRST CONTACT *Wicki***

**FOR FAST EFFICIENT MORTGAGE SERVICES**

- **100% MORTGAGES UP TO £75,000**
- **NON-STATUS MORTGAGES**
- **3.75 TIMES JOINT INCOME**
- **3 TIME SINGLE INCOME**
- **4 TIMES FOR PROFESSIONALS**
- **90% MORTGAGES FOR COMMERCIAL PROPERTIES**
- **FREE VALUATION FOR PROPERTIES OVER £90,000**

***RAISE CASH FOR ANY REASON***

- **HOME IMPROVEMENT**
- **HOME FURNISHING**
- **SECOND HOME FOR INVESTMENT**
- **CAR LOANS**
- **SCHOOL FEE PLAN LIFE & PENSION, COUNCIL PURCHASE**
- **UNSECURED LOAN UP TO £3,000 (WITHIN 48 HOURS TIME)**

*FOR QUATATION & FRIENDLY ADVICE*

**CALL *Wicki***

**[Appointed Representative for Leagal & General]**

**Lawrence House,**
**555 Lea Bridge Road,**
**London E10 7EQ,**
**Tel: 01 - 556 5372 / 9074 (Office)**
**01 - 558 1539 (Home)**

**Licensed under the Consumer Credit Act 1974. Agency No: 2021251**

# கவியரசர் காளமேகப் புலவர் வாழ்வில் ஓர் சம்பவம்

## சாலப் புவிராயர் போற்றும் கவிராயராவில்....

நீ. சிவபாலன்

தமிழ் புலவர்களிலே காளமேகப்புலவர் ஒரு தனித்தன்மை வாய்ந்தவர். அடை மழை போல் பாடல்களை இயற்றுவதில் வல்லவர். அதனால் தான் காளமேகப்புலவர் என்ற காரணப்பெயர் கூட வந்தது. அவரது புலமையைப் பட்டினத்தடிகள் தனது பாடல் ஒன்றிலே "ஐயையோ வேகுதே மண்தின்ற பாணம் என்ற வாய்" என்கின்ற அடியில் அவரது வாயைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

காளமேகப்புலவரின் சொற்திறமையும், பொருட்திறமையும் மற்றப்புலவர்களெல்லோரையும் பொறாமை கொள்ள வைத்தது.

காளமேகப் புலவர் ஒருமுறை தென்நாட்டிலிருந்து வடநாட்டிற்குப் போனார். அப்போது ஒரு நாள் அவ்வூர்மன்னனின் அரசவைக்குப் போனார். அங்கிருந்த புலவர்கள்எல்லோரும் பொறாமை காரணமாக காளமேகப்புலவருக்கு எழுந்து மரியாதை செய்யவோ, ஆசனம் கொடுக்கவோ இல்லை. அப்போது காளமேகப்புலவர் வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவளும், வணங்கத்து நான்கு கலைகளுக்கும் தெய்வமு மாகிய அன்னை கலைவாணியை நினைத்தார் அவர் நினைத்த மாத்திரத்தே மன்னவருடைய சிம்மாசனம் ஒரு முழம் வளர்ந்து காளமேகப் புலவருக்கு இடம் கொடுத்தது. உடனே காளமேகப்புலவர் அன்னை வாணியின் அருளை வியந்து பின்வரும் பாடலைப்பாடினார்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியாசனத்தி லீ அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்"

இந்த அற்புதத்தைக் கண்டும் புலவர்களின் தலைக்கனம் குறையவில்லை. அப்போது காளமேகப்புலவர் அங்கிருந்த புலவர்களைப்பார்த்து நீங்களெல்லோரும் யார்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் தாங்கள் "கவிராயர்கள் " என்று இறுமாப்போடு பதிலளித்தார்கள். அதன் பொருள் கவிபாடுவதில் மிகவும் சிறந்தவர்கள் என்பதாகும். தமிழில் ஒரு சொல் பல கருத்து தருவதுண்டு.

கவிராயர் என்ற சொல்லுக்கு "குரங்கு " என்ற பொருளும் இருக்கின்றது.

அப்போது காளமேகப்புலவர் அந்தக்கவிராயர்களின் ஆணவத்தைக் கண்டு சிரித்து விட்டு நகைச்சுவையாக பின்வருமாறு கேட்டார்.

"வாலெங்கே? நீண்டெழுந்த வல்லுகிலெங்கே?
நாலு காலெங்கே? ஊன்வடிந்த கண்ணெங்கே? – நீவிர்
சாலப் புவிராயர் போற்றும் கவிராயர்
என்றிருந்தக் கால்".

இந்தப் பாட்டின் பொருள் பின்வருமாறு –

நீங்கள் பூமியில் வாழுகின்ற மக்களிலே கவிராயர் (குரங்கு) என்று புகழ்ந்து சொல்லப் படுவீர்களாயின் உங்களது

1. வாலெங்கே?
2. உடலெல்லாம் நீண்டு வளர்ந்த உரோமம் எங்கே?
3. நாலு கால்களெங்கே?
4. எப்பொழுதும் ஊன் வடிந்து கொண்டிருக்கும் கண்களெங்கே?

இந்தப் பாடலைக் கேட்டதும் கோபத்துடன் தங்கள் புலமைத்துவத்தைக் காட்ட ஒரு பாடலை சொல்லத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களால் முதலிரண்டு வரிகளும் சொல்லி முடிக்கு முன்னே காளமேகப்புலவர் மிகுதியிரண்டு வரிகளையும் சொல்லி முடித்தார். அந்தப் பாடல் இதுதான்,

" ஆம் மென்னு முன்னே அறுநூறும் எழுநூறும்
இம் மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ- சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனேயாகில்
பெரும் காளமேகம் பிளாய்".

இந்தப் பாடலில் முதல் இரண்டு வரிகளிலும் புலவர்கள் தாம் இம்என்று சொல்லு முன்னே ஆயிரம் பாட்டுகளை இயற்றிவிடுவோம் என்ற பொருள் படக் கூறினார்கள். காளமேகப் புலவர்அதற்குப் பதிலாக நான் சும்மா இருந்தால் இருப்பேன். ஆனால் நான் எழுந்தே னென்றால் பெரிய மழையைப் பொழியக்கூடிய கருமேகம் எவ்வாறு மழையைப் பொழியுமோ அது போல் பாட்டு மழை பொழிவேன் என்று பொருள்படக் கூறினார். இதன்பின் புலவர்கள் எல்லோரும் வெட்கித்தலை குனிந்து நின்றார்கள். மன்னன் காளமேகப்புலவரைப் புகழ்ந்து பல பரிசுகளும் கொடுத்து கௌரவித்து அனுப்பிவைத்தான்.

---

நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை - இதுவே மகிமை பெறுவதின் இரகசியமாகும். உங்கள் முப்பத்து மூன்று கோடிப் புராணத் தெய்வங்களிடத்தும், மேலும் அவ்வப்போது உங்களி டையே அன்னிய நாட்டவர், புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் உங்களுக்கு நம்பிக்கை இருந்து, ஆனாலும் உங்களிடத்தே உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்கும் கதி மோட்சமில்லை.

-சுவாமி விவேகானந்தர்-


CAR & VAN HIRE
DAILY, WEEK-END OR WEEKLY & UNLIMITED MILEAGE
PHONE US FOR THE BEST DEAL
Hertz
Tel: 01-804 2430
Hertz
10% OFF
ON DAILY CAR-RENTAL PRICE
WITH THIS ADVERTISEMENT

# அரசியல் அதிர்வேட்டுக்கள்

வாசகர்களே! இப்பகுதிக்கு உங்களின் அனுபவங்களையும் எமதி அனுப்பலாம். நீங்கள் விரும்பாவிடில் உங்கள் பெயரை வெளியிடும் அவசியமில்லை. இப்பகுதி எவரையும் கிண்டல் செய்வதற்குப் பயன்படுத்தப்பட மாட்டாது. இது முற்று முழுதான அரசியல் அனுபவத்தில் நிகழும் நகைச்சுவைச் சம்பவங்களைத் தாங்கி வருகிறது. உங்கள் அனுபவம் தரமானது. மற்றவர்களுடன் ஏன் அதைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

## "உசிரா? மசிரா??"

லண்டனிலுள்ள சீக்கிய இனத்தவர்கள் இங்குள்ள சட்டப்படி மோட்டார் சைக்கிளில் செல்லும் போது கவசம் (ஹெல்மெட்) அணிய வேண்டுமா, அல்லது தேவையில்லையா, என்ற சர்ச்சை எழுந்த காலமது. சீக்கியர் தலைமயிரைக் குறைத்து வெட்டித் தமது தொப்பியை அவிழ்த்துத் தலைக்கவசம் அணிய முடியாதென வாதாடுகிறார்கள். சட்டமென்றால் எல்லோருக்கும் ஒரே சட்டம் தான் என லண்டன் பொலிசார் இங்கு வரிந்து கட்டிக் கொண்டனர். இது பற்றிக் கலந்தாலோசிக்க இந்தியாவிலிருந்து இரு உயர் அதிகாரிகள் இங்கு அனுப்பப்பட்டனர்.

இச்சம்பவங்களின் போது தமிழ்நாட்டு அரசியல்வாதியொருவர் ஓர் கூட்டமொன்றில் இப்படிப் பேசினார். " என் பாசத்துக்கு இனிய தமிழ் பேசும் மக்களே, எனது உடன் பிறப்புக்களே, லண்டனில் எழுந்துள்ள சீக்கியரின் 'மசிர்' பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இந்திய அரசாங்கம் இரண்டு பிரதிநிதிகளை அங்கு அனுப்பவுள்ளது. ஆனால் எமது தென்கரையிலேயே இன வெறி பிடித்த சிங்கள இராணுவக் காடையினரால் எமது தமிழ் உடன் பிறப்புகள் ஆயிரமாக சுடப்பட்டு கடலினுள் வீசப்படுகின்றனர். இதைப்பற்றி இந்திய அரசாங்கம் கவலைகொள்வதாகத் தெரிகின்றதா? மசிர் போவதைத் தடுக்க முயற்சிக்கும் இந்திய அரசாங்கம் உசிர் போவதைப் பற்றி மௌனமாக இருப்பதேன். உசிரா? இல்லை மசிரா? எதுபெரிது? என ஆவேசமாகப் பேசி மக்களின் ஏகோபித்த கரகோஷத்தைப் பெற்றார்.

## அதுவும் நாங்கள் தான்

இயக்கங்கள் தளத்தில் செய்து கொண்டிருந்த இராணுவத்தாக்குதல்களைப் போட்டி போட்டுக் கொண்டு உரிமை கோரிப் பிரபல்யப் படுத்திக் கொண்டிருந்த காலமது.. இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன், வழமையான சம்பவம் போல் அன்றும் லண்டனில் ஓர் இயக்க உறுப்பினர் அவரைச் சுற்றியிருப்பவர்களுக்குக் குழையடித்துக் கொண்டிருந்தார். அந்நாட்களில் ஒரு தாக்குதலை இரண்டு அல்லது சில வேளைகளில் மூன்று இயக்கங்கள் கூட உரிமை கேட்பது ஒரு பாசன். அந்தத் தாக்குதல் எப்படி நடந்தது என வினவ " அதுவும் நாங்கள் தான் செய்தது. பின்னேரம் ஒரு மூன்றேமுக்கால் இருக்கும்...." என லண்டனில் இருப்பவர் அங்கு நடந்ததைப் பற்றிய நேர்முக வர்ணனையைக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்களில் இருந்த இன்னொருவர் மட்டக்களப்பில் சைக்கிளோன் (சூறுவளி) நடந்த நேரம்" என்று ஏதோ கூற ஆரம்பித்தார்.

ஏற்கனவே உணர்ச்சி பூர்வமாக இருந்த அந்த இயக்கப் பிரதிநிதி "அதையும் நாங்கள் தானே செய்தது!", என்றார். எல்லோரும் வாயைக் கையால் மூடிக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தனர். அந்தப் பிரதிநிதிக்கு எங்கோ ஏதோ ஒரு பிழை நடந்து விட்டதென அப்போது தான் புரிந்தது. ஆனால் என்ன பிழை என்பது அவருக்குப் புரியவில்லை.

காயத்திரி. கொன்ஸ்டன்ரைன்

---

உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மீகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

– சுவாமி. விவேகானந்தர். –

# வால்தம் பொரஸ்ட் தமிழ்ச் சங்கம்



வோல்தம் பொரஸ்ட் தமிழ்ச் சங்கத்தின் மூன்றுவது வருடாந்த பொதுக்கூட்டம் 3.9.88 அன்று பிற்பகல் 6 மணியளவில் வோல்தம்ஸ்ரோவிலுள்ள புனித லூக்ஸ் தேவாலயத்தில் தலைவர் திரு. P. சாந்திகுமார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவதாக தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினர். அடுத்து 2வது பொதுக்கூட்ட மத்திய வருட செயற்பாடுகள் வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தலைவரால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் சங்கத் தனாதிகாரி திரு கனேசலிங்கம் கடந்த காலக்கணக்கு விபரங்களை அங்கத்தினருக்கு விநியோகித்துப் பின்னர் வாசித்தார். அதன் பின்னர் புதிய நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். புதிய நிர்வாக சபையினர் விபரம் பின்வருமாறு:-

திரு. P. நந்தகுமார் (தலைவர்)
திரு. M. கனேசலிங்கம் (செயலாளர்)
திரு. K. யோகநாதன் (தனாதிகாரி)
திரு. V. மூர்த்தி (உப தலைவர்)
திரு. N. நயாளன் (உப செயலாளர்)
திரு. K. ஜெயக்குமார் (உப தனாதிகாரி)

நிர்வாக சபை அங்கத்தவர்கள் விபரம் வருமாறு:-

திரு. P. சாந்திகுமார்.
திரு. B. ரவீந்திரன்
திரு. R. பசுபதி
திரு. G. மேகநாதன்
திரு. S. குகசீலன்
திரு. N. பாலசிங்கம்
திரு. N. ரவீந்திரன்
திரு. . ஸ்கந்தமூர்த்தி
திருமதி. R. பரமானந்தன்.

# A.B.C மயில்வாகனத்தார்

பாத்திரங்கள்
==========

(நகைச்சுவை நாடகம் காட்சி-1)

தமிழ்நெஞ்சன் இரா.மோகன்

1. மயில்வாகனம்
2. கமலம்

மயில்வாகனம்- பாலும் தெளிதேனும் ,பாகும்பருப்புமிவை, சீ, பருப்பு சரியான விலை.

பாலும், தெளிதேனும், பாகும், சோயாமீன்சும் கலந்து உனக்கு நான்தருவன்

கோலம் செய் துங்கக்கரிமுகத்து .... தேவாரமும் மறந்து போச்சு.

எங்க பேப்பரப் பாப்பம்.
பேப்பரில என்ன புதினம் போடப் போறுங்கள்.
அங்கை குண்டு வெடிச்சுது. ஈங்க செல் விழுந்தது எண்டு போட்டு விடியக்காத்தால நீட்ட குளப்பிப் போடுவாங்கள்.

இங்கை ஒரு மரண அறிவித்தல் ஒண்டு கிடக்கு, யாராக்கும்?
பொல்லுத்தடக்கி விழுந்த புண்ணியமூர்த்தி காலில் கல்லுக்குத்தி பல்லுடைந்து அகால மரணம்.
"மனுசனுக்கு நல்ல சா.

விளையாட்டு :- திருவாளர் ஆறுமுகம் பிள்ளைத்தாச்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றார்.

"என்ன இருந்தாலும் ஆறுமுகம் கெட்டிக்காரன். இந்தக்காலத்தில பிள்ளத்தாச்சிப் போட்டியில முதலிடம் பெற்ற எண்டால் விளையாட்டே?.

"ஆ'?.. அது என்ன போட்டி ? வர வர இந்தக் கண்ணும் நல்லா மக்கர் பண்ணுது." பாப்பம் இன்னொருக்கா

திருவாளர் ஆறுமுகம்பிள்ளை தாச்சிப்போட்டியில் முதலிடம் பெற்றார்."அது தானே பாத்தன்".

"எடி கமலம் உந்த கேத்தண்ணிய கொண்டா".

கமலம்:- "அதுக்கேனிப்ப கத்துறியள்?" இந்தாருங்கோ.

மயில்வாகனம்-"எறிவாய் போல கிடக்கு? ஏன் கிறிக்கற் மச் கிட்டடியில பாத்தனியே?
இத விட ஒரு சிப்பியில கொணந்திருக்கலாம். ஹா, ஹா என்னடி சீனி இல்லாமல் கொண்டுவந்திருக்கிறாய்?"

கமலம்:- "நான் நேற்றெல்லே சொன்னனான் சீனி வாங்கிக் கொண்டு வாங்கோ எண்டு"

மயில்:- "ஓமடி நேற்று சொன்னப்போல உந்த சங்கக்கடைக்கு போனனான். கொக்கத்தடி மாதிரி ஒரு பில் கிளாக் அவர் புதாள் போல கிடக்கு, தம்பி ஒரு அரை றாத்தல் சீனி தாடா மோன எண்டு கேட்டன். அவர் பேனையால ஒரு க்கித் தலையை சொறிஞ்சு போட்டு காட்டெண்டார். எனக்கு தலையால வேர்த்தப்போச்சு.
நான் திரும்பவும் அரை றாத்தல் சீனி தானே கேட்டனான் தம்பி எண்டன். அவர் திரும்பியும் காட்டெண்டார். பக்கத்தில பெண்பிரசுகள் எல்லாம் நிண்டுதுகள்."

கமலம்:- "அப்பிடிக் கேட்டவனோ? ரஸ்கல், இப்ப போகட்டே? போய் கேக்கிறன்"

மயில்:- "எடியேய் நானுவது ஆம்பிள உன்ன என்னென்ன கேக்கிறானோ? நான் சொன்னன் அரை றாத்தல் சீனி கேட்டதுக்கு கீட்டெண்டனி, ஐஞ்சு றாத்தலுக்கெண்டால் என்னவெல்லாம் கேட்டிருப்பாய்? எண்டிட்டு வந்திட்டன்."

கமலம்:- "ஐச்சயப்பா அதப்பா சீனிக்கு ஒரு மட்டையெல்லே கொண்டு போகவேணும் அதக்கான் அவன் காட் எண்டிருப்பான் போல, எனக்கு இப்பத்தான் விளங்கிச்சுது.

மயில்:- "எட அதையே காட் எண்டவன்? எனக்குத் தெரியுமே உதுகள், நீ என்ன பிடிச்சு அனுப்பிலை?....."

கமலம்:- "அது சரியப்பா ,பக்கத்து வீட்டு பறுவதம் சொல்லுறாள் நீங்கள் அமெரிக்காவுக்கு

போனனீங்களாம், எனக்குச் சொல்லேல்ல பாத்தீங்களே".

மயில் :- "ஓ! அதோ? அப்ப என்ன ஒரு 1926 இருக்கும். என்னை ஐக்கிய நாடுகள் சபையில பேசவேணும் எண்டு சொல்லிப்போட்டாங்கள்".

கமலம் :- "அங்க என்னப்பா நடந்தது? சொல்லப்பா".

மயில் :- "இனி இவள் விடமாட்டாள், பேசிக்காட்டவே?".

கமலம் :- "பேசனப்பா"

மயில் :- "சரி எண்டால் என்ர முறை வந்திட்டுது, மேடையில் போய் நிண்டன். ஒரு தமிழன் அமெரிக்காவில அதுவும் ஐக்கிய நாடுகள் சபையில பேசுறதெண்டால் சும்மாவே? எல்லாம் ஒரே வெள்ளைத்தோலுகள், அதோட வாய் மணம் ஒருபக்கம். பின்ன எல்லாருக்கும் வணக்கம் சொல்ல வேணும் ( பேச்சு) தட்டுறான் தட்டுறான் கையைத் தட்டுறான், எறியிறான், எறியிறான், பூ மாலையால எறியிறான்." அடுத்த முறையும் வந்து பேசவேணும் எண்டு தலைவர் சொல்லிப் போட்டார்.
26 எழுத்திலையும் கலந்து குடுத்தனெல்லே"

கமலம் :- "என்ர ராசா (நாவூறு பார்த்தல்)
உவ்வளவும் உந்த மண்டைக்குள்ளையே கிடந்தது? அடுப்பில கோப்பிக் கொட்டை வைச்சனான், கருகுது போல கிடக்குது (கமலம் போதல்)

மயில் :- "(முயல் நித்திரை)
(கமலம் ஓடி வருதல்)
என்னடி ஓடி வாறாய்?

கமலம் :- "இஞ்சயப்பா அப்பா வாறாராம் "

மயில் :- "கொப்பர் என்ன பிறைமினிஸ்ரறே? ஓடி வாறாய்.

கமலம்: "என், அப்பா எண்டால் உங்களுக்கு ஆகாதே?

மயில்: " கொப்பர் திறமானவர் எண்ட எண்ணமோ?

கமலம்: "ஏன்? எண்ட அப்பாவுக்கு என்னவாம்?

மயில்: "எங்கட முதலிரவுக்கு பெற்றோல்மாக்ஸ்ஸை தூக்கச் சொல்ல தூக்கத் தெரியாமல் கிணத்துக்குள்ள கட்டி இறக்கினவரெல்லோ?

கமலம்: "என இஞ்ச, உங்கட அப்பா பெரிய திறமோ?

மயில்: "ஏனடி அந்தாள இதுக்குள்ள இழுக்கிறாய்?

கமலம்: "மாதன் முதல் யாழ்ப்பாணத்துக்கு யாழ்தேவி வர கிடாரத்தோட புகையிரதத்துக்குத் தண்ணியெல்லே கரைச்சு வச்சவர். அதோட நீங்கள் என்ன திறமோ? கலியாணத்துக்கு முந்தி நான் குளிக்கேக்கை பாக்கோணும் எண்டு கிணத்தடிக்குப் பக்கத்திலை நிண்ட பப்பாவிலை ஏறிப் பப்பாவோடை முறிஞ்சு கிணத்துக்குள்ள விழுந்த பாவமெண்டு நானெல்லே தூக்கி விட்டனான்.

...இன்னும் சுவையோடு தொடரும்.....

Silence is of four kinds: Silence of speech,Silence of the eye, Silence of the ear and Silence of the mind. Only the last is pure silence and is the most important. The commentary of silence is the best commentary as illustrated in *Lord DAKSHINAMURTI*. Only silence is the eternal speech, the one word, the heart to heart talk.

*-RAMANA MAHRESHI.*

# SCIENCE & TECHNOLOGY

*CURRENT NEWS CURRENT NEWS CURRENT NEWS CURRENT NEWS*

## Biomedical researchers stunned by a court rule

A court in California which ruled last month that blood and tissue taken from a patients remain his or her personal property. Patients are also entitled to a share of any profits that result from commercial products made from their cells. The ruling-the first of its kind in the US- challenges the common practice of growing cells from the blood and tissue of patients.

## Molecular Memories for Chemical Computer

A CALIFORNIAN physicist has challenged organic chemists to synthesise new type of polymers for constructing electronic memory circuits. The memories will use chemical and biological process to store and transmit information. John Hopfield, of the Californian Institute of Technology in Pasadena, and AT&T Bell Laboratories in New Jersey, has drawn up a blueprint for a chemical memory in *Science* magazine.

The idea of a chemical using such a memory was first put forward by Forrest Cater, of the Novel Research Laboratories in Washington. He suggests. that a computer which used chemical and biological process- a "super molecular information processor" as he called it - was not only possible but would be smaller and faster than electronic computers. Chemical reactions involve the transfer of electrons at a molecular level, so a "molecular chip" could conceivably hold thousands more transistors than is currently possible.

A computer using chemical components would use much less electricity than an electronic computer.

## Diabetes & Cold Climates

**Children** living in cold climates are much more likely to suffer from insulin-dependent diabetes (IDD) than children living closer to the equator. This conclusion comes from a study into childhood diabetes in 14 countries ***(diabetes, vol 37, p1113)***. Children under 16 years old, in Finland, Sweden, Scotland, Canada and Norway are between 10 and 15 times more likely to have diabetes than children in India, Cuba, Southern California and Japan.

The researchers say that there is a "strong association" between the average yearly temperature of a country and incidence of diabetes among children. The researchers warn that the association "must be interpreted with caution". Other factors such as the prevalence of certain viruses, diet, lifestyle, and ethnic background, may also be involved.

## Mathematical Solution for Robots

**An** engineer in US has solved a complex mathematical problem which should mean that robots will be able to perform difficult maneuvers much more smoothly. The solution, which has baffled researchers for years, could lead to more mobile "humanoid" robots says Eduardo Bayo, from the University of California in Santa Barbara, who reported his work at recent Conference on Robotics in Philadelphia, Pennsylvania.

Bayo has solved the "inverse dynamics problem", which calculates how each of the numerous electric motors that control a robot arm must move to produce a particular action. Human can perform very complicated and precise movements, such as controlling the tip of a fishing rod well enough to cast the bait accurately. Before the arm moves, the brain calculates the necessary movement of each muscle involved and tells the muscles what to do as the arm swings. In the case of robot arm, the "muscles" are electronic motors which must turn by a given amount at a given moment. Each motor must be supplied with just the right amount of electric current, at just the right time.

In a series of tests Bayo has shown that sophisticated arms, with two or more joints, can be programmed to move very smoothly. In the past, engineers have used infrared cameras to monitor the position of the end of the arm. These feed the information back to a computer which adjusts the motors and rechecks the location of the end, repeating these steps until the process is complete. This technique is not very successful at controlling more than one joint. The movements are also very jerky and cause vibrations in the arm. To overcome this problem, engineers have built very heavy and bulky arms - which are not suitable for mobile robots or for applications in space, were weight must be kept to a minimum. Now the robot arms can be lighter because the motions are so much smoother.

# SCIENCE & TECHNOLOGY

*HEALTH FOOD HEALTH FOOD HEALTH FOOD HEALTH FOOD*

## PREVENTION IS BETTER THAN CURE

By Mrs. R. Nadarajah
(Continuation from ALAI OSAI vol-3 April-May 1988...)

The discovery of high carbohydrate high Fiber and low fat diets for the dietary modification for diabetes has opened the way for a completely new look at existing dietary practices.

What is fiber?

Dietary fiber is synonymous with roughage.fiber comprises those parts of the plant cell and cell wall that are not broken down by the stomach or of the small intestine.

Dietary fiber is made up of a number of components. Plant cells from different sources contain these components in different proportions.

How fiber acts ?

Each fiber component has is own physiological action in the gastrointestinal tract thats why, different plant fibers have different actions on human metabolism. For example, oat bran is useful in lowering serum cholesterol levels while white soft wheat bran has no effect. The difference can be explained by the hemicellulose content of oat bran. Cellulose acts primarily as a water-binding agent that increases the bulk of the stool and reduces the transit time of the intestinal contents. Therefore wheat brans high in cellulose are commonly used as roughage to ensure regularity and also to control diverticular disease.

Pectins, found commonly in fruits and some vegetables are effective in reducing serum coholesterol levels, as well as lowering the blood glucose (sugar) response and insulin requirements after a carbohydrate rich meal.

Gums and Mucilages which occur widely in legume seeds (beans, peas) behave in a way similar to pectins and are involved with viscous gel formation and a slowed emptying of the stomach contents. This means slower digestion of starch and slower absorption of the glucose molecules that are the result of starch digestion. For this reason diabetic patients who consume high carbohydrate (starch) high fiber diets have lower fasting plasma glucose levels and a reduced requirements for insulin or oral medication for diabetes.

[ to be continued]

Due to lack of space we areunable to produce COMPUTING & TAMIL MUSIC in this issue, but it will be on the next issue. - EDITOR

# SCIENCE & TECHNOLOGY

*QUESTION & ANSWER QUESTION & ANSWER QUESTION & ANSWER*

**Q** Dear Mr. S&T, I have Amstrad PC1640 HD20. I use it for my business. My hard disk is almost full. It takes long time to respond. I have deleted some unwanted files. Still it is very slow and disk drive make noise as well. How can I improve this?

Nesan, Tooting.

**A** *Normally DOS (Disk Operating System) files are stored starting at the beginning of a disk and each new file takes up the next free space on the disk. Think about what happens when you erase a file- it creates a hole (free space). Now further suppose that you save a file larger than the hole. How is DOS going to save it?*





**FIGURE-1: How DOS allocates disk space.**

# SCIENCE & TECHNOLOGY

*QUESTION & ANSWER QUESTION & ANSWER QUESTION & ANSWER*

Thank you for sending questing to this section. It is difficult to answer all at once. Uncle will answer some now and will be answering more in future editions.

If you have any questions about your microcomputer , don't hesitate to send them to:

COMPUTER UNCLE,
ALAI OSAI,
SCIENCE & TECHNOLOGY,
11 VIOLET ROAD,
WALTHAMSTOW,
LONDON E17 8HZ.

**Q** Computer Uncle, We will be very greatful if you could help us. I have MAC SE with one megabyte RAM. My friend has Amstrad1512. We learn to write program in BBC BASIC at school. How can we write program in BBC BASIC on our computers?

Ravi & Silva, South Croydon.

**A** *Yes, you can if you by a specialy written* ***BBC BASIC interpriter*** *for your computer.*

***BBC BASIC for Macintosh*** *is available from Human Computer Interface Ltd, 11 Brunswick Walk, Cambridge CB5 8DH. Tel:0223 314934 . It will cost you* ***£149*** *.*

*For IBM compatibles, there is one available called* ***PC BBC BASIC (86)*** *for* ***£95,*** *from M-Tec Computer Services, 4 Church Hill, Reepham, Norfolk NR10 4EL. Tel: 0603 870620 .*

# SCIENCE & TECHNOLOGY

*QUESTION & ANSWER QUESTION & ANSWER QUESTION & ANSWER*


*The figure-1 shows an approximation of what happens. Notice that File4 is not contiguous; part of it is stored where File2 used to be and the remainder is in the free space at the end of the disk. Now you know what happened when delete and save a lot of files on a disk. Eventually, most of the files become scattered across various part of the disk. Because of this the disk drive's head must move back and forth to read a single file. Which can be a noisy operation.*

*So, my suggestion is: **Restore** your hard disk. To do this first **Back-up** your files, then **reformat** the hard disk and finaly **restore** your files. Do this at least **once a month.** You will see a substantial improvement in disk **access times** and the **storage space**. Moreover, the **extra space** you'll recover using this process is well worth the time it takes to restore them properly. To restore your hard disk, type the following commands in this order:*

BACKUP C:*.* A: /S ⟵ ***(back up the hard disk)***

FORMAT C:/S/V ⟵ ***(reformat the hard disk-do this from drive A using your master DOS disk)***

RESTORE C: A: /S ⟵ ***(restore the files to your hard disk)***



# தரணியெலாம் புகழ்பரப்பும் கணிதவல்லுனன் கணேஷ் சிற்றம்பலத்துடன் சிறப்புப் பேட்டி

கணேசன். மேகநாதன்



சேர்பிற்றனில் அமைந்திருக்கும் அந்த வீட்டின் வரவேற்பறையில் ஒரு மேதையைச் சந்திக்கக் காத்திருக்கின்றேன். முன்கூட்டியே என் வரவைத் தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தேன். ஏனோ அவர் வீட்டில் இருக்கவில்லை. ஏதாவது முக்கிய அலுவலாக இருக்கும் என்று என்னுள் எண்ணிக்கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் வரும் சத்தம் கேட்டது. மூன்றரை அடி உயரத்தில் தாயாருடன் அவர் நடந்து வருகிறார். நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்ததால் மூச்சிரைக்கிறது. நான் தாயாரைக் கேள்வி கேட்கத் தொடங்கியதும் " நீங்கள் பேசிக் கொண்டிருங்கள், நான் இன்னும் 10 நிமிடங்கள் விளையாடி விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறி விட்டு எழுந்தோடிப் போய் விடுகிறார்.

ஒன்பது வயதுச் சிறுவனை கணேஸ் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்திருக்கிறான். உலகத்திலேயே மிகக் குறைந்த வயதில் இச்சாதனையை நிகழ்த்தியவன் இவனே. 1979ம் ஆண்டு மாசி மாதம் 11ம் நாள் லண்டனில் பிறந்தான். இவனுடைய தந்தையார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தாயார் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்.

ஐந்து வயதுச் சிறுவனை இருக்கும் பொழுதே பகுபதங்கள், பகாப்பதங்கள் பற்றிப் பேசியிருக்கின்றான். சில வேளைகளில் தாயாரை விளையாட வரும்படி அழைப்பானும். ' என்ன விளையாட்டு ' என்று தாயார் கேட்டால் ' கணக்கு விளையாட்டு விளையாடலாம் ' என்று பதில் கூறுவானாம். ஆம். அவனைப் பொறுத்தவரை கணிதம் என்பது மிகவும் பிடித்தமானதொரு விளையாட்டு. நாட்கள் செல்லச் செல்ல அவனது கேள்விகளும் வளரத் தொடங்கின. இதனை ஆரம்பம் முதலே அவதானித்து வந்த தந்தையார் அதிக அக்கறையுடன் அவனுக்கு விளக்கம் சொல்லி வந்திருக்கிறார்.

கணேஸ் 1987ம் ஆண்டு கார்த்திகை மாதம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்திற்குத் தோற்றித் திறமைச் சித்தி பெற்றான். பின்னர் இவ்வாண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் (சரியாக 6 மாதங்களின் பின்னர்) MATHEMATICS, FURTHER MATHEMATICS ஆகிய இருபாடங்களிலும் திறமைச்சித்தி பெற்றிருக்கிறான். இது வரையில் கணித பாடத்திற்கு இவன் தனிப்பட்ட பயிற்சி வகுப்புக்களுக்குச் சென்றதில்லை. எல்லாம் தந்தையார் சொல்லிக் கொடுத்தது தான். நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு இப்பாடத்தில் செலவிட்டிருக்கிறான்.

இதற்கு முன்னர் RUTH LAWRENCE என்னும் ஒன்பதரை வயதுச் சிறுமி இத்தகையதொரு சாதனையை நிகழ்த்தியிருக்கிறாள்.

இடையில் கணேஸ் வந்து அமர்கின்றான். அன்று காலையும் தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்திருக்கிறான். நிருபர்களைச் சந்தித்து அவனுக்கு அலுத்துப் போய் விட்டது. SURBETON PREPARATOPY SCHOOL இல் 5ம் தரம் படிக்கிறான். கணித வகுப்புகள் நடக்கும் தனியாக ஒரிடத்தில் அமர்ந்து தனது தரத்திற்கேற்ற கணக்குகளைச் செய்து கொள்கிறான். இவனது சாதனை பத்திரிகைகளில் வெளிவந்த போது நண்பர்கள் "GENIUS GANESH என்று இவனைக் கேலி செய்து இருக்கிறார்கள். இப்போது அவையெல்லாம் அடங்கி மீண்டும் நல்ல நண்பர்களாகி விட்டார்கள். நீச்சல் இவனுக்கு மிகவும் பிடிக்கும். வேறு என்னவெல்லாம் செய்யவிரும்புகிறாய் எனக் கேட்டேன்? "இப்போது வெளியில் சென்று விளையாட விரும்புகின்றேன் என்றான் அக் குறும்புக்காரன்.


கணேசினுடைய தந்தையும் கணிதத்துறையில் தேர்ச்சி பெற்றவர். பாட்டனார் திரு, சிற்றம்பலம் அவர்களும் கணிதத்துறையில் தேர்ச்சி பெற்றவர். பாட்டனார் 1947ம் ஆண்டிலிருந்து 1956ம் ஆண்டு வரை இலங்கை மன்னார்த் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக (சுயேச்சை) இருந்தவர். இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட அழைப்பின் பேரில் தபாற் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சராகவும் இருந்திருக்கின்றார். "கணேஸ் அவனது பாட்டனாரின் மறுபிறப்பாக இருப்பானோ" என்று சந்தேகத்துடன் தாயாரைக் கேட்டேன். "இல்லை. நாம் அப்படி நினைக்கவில்லை. எல்லாரையும் போல் அவனும் ஒரு சாதாரண குழந்தை தான்" என்று சற்று அழுத்தமாகவே கூறினார்.

தப்பாக ஏதாவது கேட்டுவிட்டேனோ என்னும் ஏக்கத்துடன் என் முகத்திலும் ஏதோ வழிந்த மாதிரி இருந்தது. துடைத்துக் கொண்டேன். இவ்வளவு நேரமும் ஏதோ காரியத்தில் ஈடுபட்டிருந்த தந்தையார் அன்றைய "TIMES" பத்திரகையுடன் மாடிப்படி இறங்கி வந்தார்.

"இந்தப் பத்திரிகையில் பல்கலைக்கழக அநுமதிக்கு 8 புள்ளிகளிலிருந்து 10 புள்ளிகள் வரை கேட்டிருக்கிறார்கள். கணேஸ் 10 புள்ளிகள் வரை பெற்றிருக்கிறான். பல்கலைக்கழக அனுமதிக்கு அவன் தகுதி பெற்றவன். வயது ஒரு தடையாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் ஒரு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வயது ஒரு தடையாக இருக்க மாட்டாது என்று சொல்லி விட்டார்," என்று ஆச்சரியமான தகவலை வெளியிட்டார். ஆனால் கணேசைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப் பெற்றோர் விரும்பவில்லை." அவன் சின்னக் குழந்தை. மற்றச் சிறுவர்களைப் போல் அவனும் இளமைப் பருவத்தை அனுபவிக்கட்டும். நானேயே அவன் கணிதத்தை உதறித் தள்ளினாலும் நாம் அவனைக் கட்டாயப்படுத்த மாட்டோம் என்று கூறினார்கள்.

கணிதத்துறையில் அதிக நாட்டம் செலுத்துவதனால் மற்றைய பாடங்களில் கவனம் குறைந்திருக்கிறதாவென்றால் அதுவுமில்லை. மற்றைய பாடங்களிலும் நல்ல மதிப்பெண்களைப் பெற்று வருகிறான். இவனுடைய உலகப்பெரும் சாதனை GUINNESS BOOK OF RECORDS இல் இடம் பெறப் போகிறது.

பேட்டியை முடித்துக் கொண்டு புறப்படும் போது ஏதோ கூற வேண்டும் போல் தோன்றியது. கூறி விட்டேன்." சாதனை படைத்த ராமநுஜத்தின் வழியில் வளர்ந்து வரும் மாமேதை இவன்" எம் வாக்குப் பலிக்கும் என்றே நினைக்கின்றோம்.



தாய் தந்தையருடன் கணித வல்லுனன் கணேஸ்

யேசுநாதர் பொன்மொழிகள்.



* உன்னிடத்தில் நீ அன்பு கொள்வதைப் போல் பிறரிடத்திலும் அன்பு கொள்வாயாக.
* இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
* உன் கண் கெட்டதாயின் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.
* நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கின்றதென்ன.
* கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்போது நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்.
* உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லோருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன்.
* தன்னை உயர்த்துபவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்.

# இது நம்ம ஆளு (சினிமா விமர்சனம்)

ஆ.மேகநாதன்



பாக்கியராஜின் படத்தில் நகைச்சுவைக்கும் பொழுது போக்கு அம்சங்களுக்கும் குறைவிருக்காது என்று நம்பிப் பார்க்கலாம். இந்தப் படத்திலும் அந்நம்பிக்கை வீண் போகவில்லை.

தாயாரின் கண் சிகிச்சைக்காகப் பத்தாயிரம் ரூபாய் பணம் சேர்க்கும் எண்ணத்துடன் பட்டணத்துக்கு வருகிறான் ஒரு பட்டதாரி இளைஞன். பசி வயிற்றைப் பிடுங்குகிறது. நேர்மை காற்றில் பறக்கிறது, நாவிதர் குலத்தைச் சேர்ந்தவன், பிராமணனாக வேசம் போடுகிறான். பிராமணர் வீட்டிலே தங்கிக் கொள்கிறான். அந்த வீட்டுப் பெண்ணுக்கு இவன் மேற் காதல். தாலி ஏறிய பின்னர் இவன் பிராமணனில்லை எனத் தெரியவர கடும் பிராமணரான தந்தை, தனது மகளை இவன் தொடவே கூடாது என்றும் கொடிய சத்தியத்தை வாங்கி விடுகிறார். தம்பதியர் எப்படி ஒன்று சேர்கிறார்கள் என்பதே மீதிக்கதை.

கணபதி பூஜை நடக்கும் போது பிராமணனாக நடிக்கப் பாக்கியராஜ் படும் பாடு, அந்தப் பாட்டுப் போட்டி, கல்யாணத்தில் பொய்த் தாய், தந்தையர் அடிக்கும் லூட்டி,.. இவையெல்லாம் எமது வயிற்றை வலிக்க வைக்கும் சிரிப்புக் கட்டங்கள். பிராமணனுக்கு நாவிதன் பூணூல் கட்டுவது, பிராமணக் குழந்தைக்கு தாழ் குலப்பெண் பாலூட்டுவது, தீயைச் சாட்சியாக வைத்து வாங்கிய சத்தியம் தீயின் முன்னே கரைந்து போவது – இவையெல்லாம் புதுமை சேர்க்கும் கட்டங்கள்.

முந்தானை முடிச்சில் முருங்கைக்காய், இங்கே மாட்டுச் சத்தம். (நல்ல வேளை லண்டன் வீடுகளில் பசு மாடு இல்லை.) முந்தானை முடிச்சைப் போலவே திருமணத்தின் பின்னர், கணவன், மனைவி தனித்தனியே படுக்க வேண்டிய நிலை.

படத்தின் நாயகி சோபனா மீண்டும் தமிழுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறார். துடிப்பான குறும்பு கலந்த நடிப்பில் எம்மைச் சொக்க வைக்கிறார். எப்பொழுதும் குதூகலமாகக் காட்சியளிக்கும் கலைஞானம் (ஐயர்) திறமையை நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். சோமயாஜுலு, மனோரமா ஆகியோரின் நடிப்புக் குறிப்பிடத்தக்கது.

திரைக்கதை, வசனம், இயக்க மேற்பார்வை, ஆகியவற்றுடன் இசையமைத்துப் பாடியுமிருக்கிறார் பாக்கியராஜ். எம்.ஜி.ஆரின் வாரிசு என்னும் முறையில் ஒரு பாடல் காட்சி பூராவும் எம்.ஜி.ஆரைக் காப்பித்திருக்கிறார். பாரதிராஜா படத்தைப் போல் இறுதிக் காட்சிகளில் தீ கொழுந்து விட்டு எரிகிறது. குருவுக்குத் தப்பாத சீடன்.

படம் நன்றாக இருக்கிறது. இருந்தாலும் சில நெருடல்கள்.

1. தாழ்த்தப்பட்டோரை உயர்த்துவதாகச் சட்டங்கள் இயற்றப்பட்டு அதன்மூலம் பிராமணர்கள் பின்னேக்கித் தள்ளப்படும் காலகட்டத்தில் பிராமணர்களை வம்புக்கிழுத்திருக்கிறார்கள். நியாயம்தானா ?

2. "ஒரு புதிய ஜீவனை உருவாக்குவதற்காக நான்கு சுவர்களுக்கிடையேயிருக்கும் இரண்டு உள்ளங்களுக்கு மட்டுமே தெரியும் புனிதமான உறவு" என்று தாம்பத்திய உறவுக்குக் காந்தியடிகள் விளக்கம் சொன்னார். அத்தகைய நிலையில் நாயகன் ஊர்மக்கள் முன்னிலையில் நாயகியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்று கதவைச் சாத்துவது மனத்தை என்னமோ செய்கிறது.

3. சாமி ஆடுவதில் உண்மையிருக்கிறதா இல்லையா என்பது வாதத்திற்குரிய விடயம். ஆனால் இன்றும் அது புனிதமாகக் கருதப்படுகிறது. அந்நிலையில் சாமி வந்து ஆடுவதாக நடிக்கும் நாயகி அதே தோற்றத்தில் காம சுகம் தேடிப்பாடுவதும் ஏற்புடையதாக இல்லை.


தாயே, நான் பெரியவன், நான் பிராமணன், அவர்கள் தாழ்ந்தவர்கள், பறையர் என்பன போன்ற கருத்துக்களை எல்லாம் என்னிடத்தில் இல்லாது அழித்து விடுவாயாக. ஏனெனில் தாழ்ந்தவர்கள், பறையர், எனப்படும் அவர்களும் பல்வேறு பேதங்களில் உள்ள நீயேயன்றி வேறு யாவர்?

– பரமகம்சரின் புனித வாக்கு –

## சிறுகதை

# விதி

ஐ. சிவாகர்



மணி இரவு பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வழமை போல ராமலிங்கம் தனது காசுப்பெட்டியின் இழுப்பறையுள் இருந்த காசுகளைக் கணக்குப்பார்த்துச் சில்லறைகளை விட்டு எல்லாமாக அன்றைய வியாபாரத்தில் வந்த ரூபா நூறையும் எண்ணி எடுத்து கடையினுள் இருந்த விளக்குகளை அணைத்தார். மேசை மீதிருந்த ஒரு குப்பி விளக்குடன் கடையின் வெளிப்புறக்கதவுகளாகப் பாவிக்கும் பலகைகளை ஒவ்வொன்றாக எடுத்தடுக்கி கொழுக்கிகளைப் போட்டுவிட்டு வாயில் கதவை மட்டும் திறந்து வைத்திருந்து சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்.

ராமலிங்கம் அந்தக்கிராமத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களில் ஒருவர். வியாபாரத்தில் ஏற்பட்ட பலத்த நஸ்டத்தின் காரணமாக இன்று இந்தச் சிறிய பெட்டிக்கடைக்கு உரிமையாளராக இருக்கின்றார். வீட்டில் அன்புடன் அறுசுவையுடன் சமைத்துப் போட மனைவி. ஆசைக்கு ஓர் ஆண், அஸ்திக்கொரு பெண் என இரு செல்வங்கள் என நல்லதொரு பல்கலைக்கழகம் தான் அவர் குடும்பம், ஆனால் விதி என்று ஒன்றுள்ளதே, அது செய்த விளையாட்டு இன்று இவர்களின் கஸ்டநிலைக்குக் காரணம்.

அன்றைய வியாபாரத்தில் வந்த மொத்தத்தொகையான நூறுரூபாவையும் பார்க்கும் போது அவர் மனம் அன்று காலை வீட்டில் நடந்த சம்பவங்களை மெதுவாக அசை போடத் தொடங்கியது. அன்று காலையும் வழமைபோல எல்லா வேலைகளும் முடிய பிள்ளைகள் பாடசாலை செல்லும் நேரம் அவரும் வீட்டைவிட்டு வெளிக்கிடும் பொழுது மகள் மாலினி "அப்பா எத்தனை நாட்கள் கேட்டுவிட்டேன் இந்த ஒரு தாவணியை வைத்துக் கொண்டு எப்படி பள்ளிக்கூடம் போவது? எல்லோரும் விதவிதமாக உடுத்தி வரும் போது நான் மட்டும் இப்படி எத்தனை நாட்கள்தான் இந்த ஒரே தாவணியுடன் எந்த நாளும் போவது?" என்று சீறினாள். தாய் பாக்கியமும் வக்காலத்து வாங்கினாள். அவருக்கு இது தெரியாமலில்லை. நாளுக்கு நாள் வீட்டுச்செலவுக்கே கடையில் வரும் வருமானம் போதாமல் இருக்கும் போது அவர் என்ன செய்வார். அவருக்கும் ஆசை தான், எப்போதாவது வாங்குவோம் என எண்ணும் பொழுதும் வேறுஏதாவது செலவு வந்து தடை செய்து விடும். தாயும், மகளும் சேர்ந்து சொன்னவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தவரை மறுபுறத்தில் மகன் கண்ணன் அப்பா என்றழைத்த வண்ணம் வந்தான். அவருக்கு விளங்கிவிட்டது அவனும் ஏதோ ஒரு வேண்டுகோளோடு வருகிறான் என்று. அப்பா எனக்கொரு சைக்கிள் வாங்கித் தரவேணும், எல்லோரும் பள்ளிக்கூடத்திற்கும், ரியூசன் கிளாசுக்கும்சைக்கிளில் வரும்போது நான்மட்டும் எப்படி நடந்து போவது? எனக்குமட்டும் ஆசையில்லையா? ராமலிங்கத்திற்கு மண்டை வெடித்து விடும் போல இருந்தது. அவருக்கு மட்டும் ஆசையில்லையா? தனது மனைவி, பிள்ளைகளை வசதியாக வாழவைக்க. ஏதோ ஒரு விதி அவரை பின்தள்ளிக்கொண்டே போகிறது. ஆனால் இத்தனைக்கும் ராமலிங்கம் தனக்கில்லாவிடினும் யார் எந்நேரம் உதவி என்று கேட்டு வந்தாலும் மறுக்காமல் உதவிசெய்துவிடுவார்.

இதற்குப் பிறகு ராமலிங்கம் ஒரு தீர்க்கமான முடிவுடன் கடையை நோக்கி நடை போட்டார். இன்று வியாபாரம் முடிந்தவுடன் நாளை முதல் வேலையாக பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றுவதென்பதுதான். இப்படியே எண்ணிய மனம் அந்த நாறு ருபாவையும் எடுத்து இடுப்பில் சொருகிய வாறு, இருந்த குப்பி விளக்கையும் அணைத்து விட்டு வாயில் கதவையும் பூட்டினார்.

அவர் கதவைப் பூட்டவும் "ராமு, ராமு" என்று யாரோ அழைக்கவும் சரியாக இருந்தது. ராமலிங்கம் திரும்பியபோது அவரது அயல்வீட்டு சீனு எனும் சீனிவாசன் தான் அவசரமாக வந்து கொண்டிருந்தார். அவர் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர், அவருக்கும் மூன்று பெண்குழந்தைகள். ஓய்வு பெறுவதற்கு முன்னே முதலிரு பெண்களையும் ஏதோ வசதிப்படி மணமுடித்து வைத்து விட்டார். கடைசிப்பெண்ணிற்கு மணம் செய்ய அவர் பல இடங்களில் கடன் வேண்டியே முடிக்க வேண்டியதாயிற்று. சீனு அடிக்கடி கை மாறாக ராமலிங்கத்திடம் கடன் வாங்குவது வழக்கம். ஆனால் இந்த நேரம் அவர் இவ்வாறு வருவது ராமலிங்கத்திற்கு என்னவோ கவலையை எற்படுத்தியது. "ஏன்? சீனு என்ன அவசரமாக ஓடிவருகிறீர்?" என ராமலிங்கம் கேட்டார். ஏன் ராமு உன்னிடம் தான் ஒரு உதவி வேண்டி ஓடி வருகிறேன், என்ரை கடைசிமகள் பிரசவ வேதனைப்படுகிறாள், சீக்கிரம் அஸ்பத்திரிக்கு கூட்டிச்செல்ல வேணும். என்னிடமோ கையில் ஒன்றுமேயில்லை தயவு செய்து இல்லையென்னாமல் ஒரு ஐம்பது ருபா தந்தாயென்டால் மாதம் முடிய உன்னிடம் முதல் வாங்கியவற்றையும் சேர்த்து தந்திடுவன்.

ராமலிங்கம் ஒரு கணம் சிந்தித்தார். என்ன எண்ணினாரோ தெரியவில்லை, மறுபேச்சின்றி மடியில் இருந்த காசில் ஐம்பது ரூபாவை எடுத்துக் கொடுத்து உடனே போய் ஆக வேண்டியவற்றைக் கவனியும். என்று அவரை அனுப்பிவிட்டு தன் வழி நடந்தார்.

ராமலிங்கத்தின் கண்முன் இப்போ அவரது மகனும் மகளும் வந்தனர். இருந்தாலும் அவர் மனதில் இன்னொரு திருப்தி. ஆம் அவர் எப்பொழுதும் இப்படித்தான். மற்றவர்கள் குறை கண்டு இரங்கும் சுபாவம். நாளை காசுவரும் நம்பிள்ளைகளுக்கு அப்போ வாங்கிக்கொள்ளலாம்என்று எண்ணியவாறு நடந்தார். அப்போதும் அவர் அடிக்கடி கனது மனைவியிடம் கூறும் ஒரு முகமொழியே ஞாபகத்திற்கு வந்தது. அது தான்" பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்பதாகும். அவர் வீட்டையடையும் பொழுது அவரது சகதர்மிணி பாக்கியமும் வழமைபோல அவர் தம் வரவை எதிர்பார்த்துக்காத்திருந்தாள்.

*************************************************

Women should not get angry so easily. They must practice forbearance.In infancy and childhood their parents are their only protection, and in youth their husbands. Women are generally very sensitive. A mere word upsets them. Any words also are so cheap now-a-days. They should have patience and try to put up with parents or husbands in spite of difficulties.

*-SRI SARADA DEVI.*


## With Best Compliments


# YOGA & CO

**SOLICITORS &**

**ADMINISTRATORS of OATHS**

47 Booth Road
Colindale
London NW9 5JS.
**Tel: 01. - 205 0899**

# பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சி



ஆயக கலைகள் அறுபத்து நான்கிலும் சிறந்து விளங்குவது பரதக்கலை. ஒரே சமயத்திலே ஐம்புலன்களுக்கும் மகிழ்ச்சியை ஊட்டவல்லது பரதக்கலை. தமிழர்தம் அருங்கலைகளுள் தலைசிறந்தது. உலகிலே நாம் பலவகையான நடன வகைகளை நேரடியாகவும், தொலைக்காட்சிமூலமாகவும் கண்டிருக்கின்றோம், இந்திய நடனங்களான பரதம், கதக், கதகளி, குச்சிப்புடி, யக்சகானம். பாகவதநாடகம், மணிப்புரி, ஜாவாநாடகம் பர்மா 'பூவே', மலாய்ரோங்கின் மேற்கத்திய பலே போன்ற எத்தனையோ நாட்டியங்களிலே இலக்கண அமைதியும், நிலையான தரமும் உள்ள நாட்டியம் நமது பரதமேயாகும். நாட்டியத்தின் உட்கோள், பாவம் (   ) ராகம் (   ) தாளம் (   ) இவற்றின் முதலெழுத்துக்கள் முறையே பரத ஆகும். மூன்று சொற்களின் கடை எழுத்தும் 'ம்' ஆகும். 'ப' 'ர' 'த' மூன்றையும் முறையாக எழுதியபின் மூன்று சொற்களின் கடை எழுத்தான 'ம்' ஐ இறுதியில் எழுதினால் பரதம் என்று ஆகும்.

காலத்தின் அழிவுக்கரங்களிடமிருந்து அதிஸ்டவசமாகத் தப்பி வந்துள்ள இக்கலைப் பொக்கிசத்தை பக்தியும், பரந்த திறமையும் படைத்த நட்டுவாங்கப்பெரியோர் இக்கலையை நலிவடையாது நாடெங்கும் பரப்பி வீட்டுக்கு வீடு பாதச்சலங்கை ஒலித்திடச் செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிலே நாட்டியத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்தனர் என்பதை பழைய கல்வெட்டுக்களிலே காணலாம். சேர, சோழ பாண்டிய மூவேந்தர்கள் காலத்தில் ஆலயங்களிலே ஒவ்வொரு கல்லிலும் நாட்டியத்தை மாத்திரை வடிவங்களாக செதுக்கி அதை அழியாக் கலையாக வடித்துள்ளனர். தெய்வ சந்நிதியிலே நடன சிற்பங்கள் அமைத்ததன் மூலம் அவர்கள் நாட்டியத்தை சுகபோகமாகவோ, கேளிக்கையாகவோ கருதாமல் அதை தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகப் போற்றி வளர்த்தனர். சோழமன்னர் காலத்திலே மாபெரும் புகழ்படைத்தவன் இராஜ இராஜ சோழமன்னன். இவன் காலத்திலே பண்ணும், பரதமும் மறுமலர்ச்சி பெற்றன. தஞ்சைப்பெருநகரிலே இராஜராசேகரம் என்ற பெயருடையார் ஒருவர் இருந்தார். திருக்கோயிலைக் கலைக்கோயிலாகக் கட்டிய பெருமை இவனுக்கே உரியது. இந்தக் கலைக்கோயிலிலே தேவாரம் ஓதும் இசைவாணர்கள் நாற்பத்தி எண்மரை நியமித்தான் என்றும் சாந்திக்கூத்தன் எனும் நடன ஆசிரியனுக்கு மான்யம் வழங்கினான் என்றும் வரலாற்றுக்குறிப்பு உண்டு. சோழமன்னர்களுக்குப் பின்னர் நாயக்கரின் ஆட்சியிலும் அவர்கள் கலைக்காவலராக பெருமை பெற்று மக்களின் நன்மதிப்பை பெற்றனர்.

கி.பி 17ம் நூற்றாண்டிலே மீண்டும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தவர் கங்கைமுத்து நட்டுவனார் என்பதை நடன ஆசிரியர்கள் அனைவரும் அறிவார்கள். திருக்கோயில்களிலே எட்டுத் திக்குகளிலும் செயல்பட வேண்டிய நர்த்தனங்களுக்கு ஏற்ற நவசக்தி கௌத்துவங்களும், நடராஜர் புறப்பாட்டின் போதும் பஞ்சமூர்த்திகௌத்துவங்களையும் இயற்றி நடைமுறைக்கு கொண்டு வந்தார். இவருக்குப் பின்னர் இவரது வழித்தோன்றலாகிய பொன்னையாபிள்ளை அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே செங்கனூர் கோயிலிலே தேவாரம் பாடும் இன்னிசைப்பணியை செய்துவந்தார். இவரது இசையின் பெருமையை அறிந்த துளஜா மகாராஜா தஞ்சைக்கு அழைத்து பெரியகோயிலிலே இசைநடனப் பணியை தொடர ஏற்பாடு செய்தார். இவருக்கு பரதநாட்டியத்தை கச்சேரி முறையிலே நடத்தக்கூடிய ஒழுங்கான, தரமான முறையை வகுக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று.



இன்னிசைக்கு ஆரம்ப பாடமாக ஸரளிவரிசை ஜண்டவரிசை, அலங்காரம் இவைகள் அமைந்த சிறப்பைப் போலவே நாட்டியத்திற்கு ஆரம்ப பாடமாக அடவுகள் பத்து என வகுத்த பெருமை பொன்னையா பிள்ளைக்கே உரியது, அந்தப்பத்து வகை அடவுகளும்பின்வருமாறு அழைக்கப்படுகின்றன.

1. தட்டடவு
2. நாட்டடவு
3. குத்தடவு
4. ஜாதிஅடவு
5. தட்டுமெட்டடவு
6. மெய்யடவு
7. அறுதியடவு
8. மெட்டடவு
9. நடையடவு
10. முடிவடவு



## பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சி

இந்தப்பத்துவகையான அடவுகளையும் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு உட்பிரிவுகளுடன் மொத்தம் நூற்றிருபது அடவுகள் என விரிவுபடுத்தினர். பின்னர் அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், பதவர்ணம், பதம், ஸ்லோகம், தில்லானா என்ற ஒழுங்கான அட்டவணையையும் முறைப்படுத்தினர். இவர்கள் வகுத்த புதிய பாணியிலேயே இன்னும் எல்லா நடன அரங்கேற்றங்களும், நடனக்கச்சேரிகளும் நடைபெற்றுவருகின்றன. இவ்வாறு படிப்படியாக எமது நடனக்கலை புத்துணர்ச்சி பெற்று எல்லா நாட்டு மக்களையும் கவரக்கூடிய வகையிலே வளர்ச்சியடைந்துள்ளது. இன்றும் இந்தியாவிலே கலைத்தாகம் கொண்டவர்கள் இக்கலைக்கு மேலும் மெருகூட்டிவருகின்றனர்.

இக்கலை தமிழ் நாட்டுக் கலையே. நடனக் கலைக்கே ஒரு அற்புத உருவைச் எமது முழு முதற் கடவுளாகிய சிவபெருமானேயாகும். ஆதலால் சிவனுக்கு அம்பலக்கூத்தன், ஆடவல்லான், கூத்தப்பெருமான், நடராஜன், என்றெல்லாம் தமிழ் மக்கள் பெயர் சூடிக் கொண்டாடுகிறார்கள். இவ்வரிய கலைப் பொக்கிசத்தைக் கட்டிக் காப்பாற்றி அதை மேலும் வளர்த்தல் நம் ஒவ்வொருவருடைய முக்கிய பணியாகும்.

திருமதி. அன்னபூரணி. சத்தியமூர்த்தி
நாட்டியவிசாரதர் அரசினர் இசைக்கல்லூரி
சென்னை

Character and discipline.. You must start with the first step: The cleansing of the mind and the cultivation of virtue. Again, never accept anything free from others- Pay it back in service or work.In this way, grow with self respect and in dignity.

*- SRI SATHYA SAI BABA.*


A L A I  O S A I

Subscription Rates (12 Copies) £9.60.

Payment by cheque or Money Order only
(in favour of "Waltham Forest Thamil Sangam" )
Please complete this form and post to:-

ALAI OSAI
Waltham Forest THAMIL SANGAM
12,Grove Road,
Walthamstow,
LONDON E 17 9BN.

NAME - ..................................................................

ADDRESS _ ..................................................................

.................... ..............................

# இலங்கையும் இந்துசமுத்திர நாடுகளும்

ஜெயமோராணி

சென்ற இதழ்களில் இந்துசமுத்திரத்தில் வல்லரசுகளின் நிலைப்பாடு பற்றி விரிவாக ஆராய்ந்தோம். இந்த சமுத்திரத்தில் வல்லரசுகளின் ஆதிக்கத்தை நிறுத்தினால் மட்டுமே அது அமைதியான சமுத்திரப் பிரதேசமாகும். அதை போன்று இந்து சமுத்திரப் பிரதேச நாடுகளின் அமைதியை நிலை நாட்ட வேண்டுமாயின் அப்பிராந்திய நாடுகளில் உள்நாட்டு அமைதி நிலை நாட்டப்பட வேண்டியது மிக அவசியமாகும். இதனை இந்திய அரசு நன்கு புரிந்து வைத்துள்ளது. எனவே தான் இவ்வமைதியை உருவாக்கிப் பேணும் முறையில் இந்திய அரசு செயற்படத் தொடங்கியதுடன் தன்னுட்டுப் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு செயற்பட்டது. இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் பெரும்பாலும் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் சிறிய நாடுகளாக இருப்பதுடன் அவை யுத்த பலம் பொருந்திய நாடுகளாக இல்லை. உள்நாட்டுக் குழப்பம் மிகுந்த பொருளாதாரம் குன்றிய நாடுகள் இலகுவாக வல்லரசுகளின் வலைக்குள் விழலாம். இதனால் பிரதேச அமைதிக்குக் குந்தகம் ஏற்படலாம். எனவே தான் இந்திய அரசு தனது அயல் நாடுகளின் உள்நாட்டுக் குழப்பங்களில் தலையிடாது இருந்தது. இதன் அடிப்படையில் தான் இலங்கையில் இனவெறி தலைவிரித்தாடிய போதும் அதில் இந்தியா தலையிடாது இருந்தது.

இத்தகைய இந்தியாவின் போக்கானது இலங்கை அரசுக்கு ஒரு மறைமுகமான உற்சாகத்தைக் கொடுத்தது. எனவே தான் ஆரம்ப காலத்தில் சிறிய பாதிப்பைக் கொடுத்த இனக்கலவரம், காலஞ் செல்லச் செல்ல அடிக்கடி ஏற்பட்டதுடன் பரந்த அளவிலும் நிகழத் தொடங்கியது. இந்தியாவினது பாராமுகமான போக்கும் மற்றைய நாடுகளின் விமர்சனத்திற்கு அஞ்சும் மனப் போக்கும் இலங்கை அரசுக்கு மிகுந்த துணிச்சலைக் கொடுத்தது. இதனால் இன அழிப்பானது இலங்கையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

ஈழத்தில் தமிழர்கள் ஒரு அருவருக்கத்தக்க பரிகாசத்திற்குரிய கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டு அல்லலுற்ற போது இந்தியா பாராமுகமாக இருந்தது ஏன்? இன்று ஏன் நடுவராகச் செயற்பட்டு பிரச்சனையைத் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு ராஜீவ் வந்தார். வாசகர்களே சற்றுச் சிந்தியுங்கள். சொல்வன எல்லாம் வேதம் என்றெண்ணி சிந்திக்க மறந்து விடாதீர்கள்.

இவற்றிற்கு விடை காண நாங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அது உருவாகக் காரணமாக இருந்த கடிதத்தையும் அவசியம் ஆராய வேண்டும்.

## கடிதப் பரிமாற்றங்கள்

முதலில் ராஜீவ் காந்தியுடைய கடிதத்தைக் கவனிப்போம்.

அதியுயர் மதிப்பிற்குரியவருக்கு ;

(1) இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் எங்கள் இரு நாட்டினது பரஸ்பர சிநேகிதத்தை வலியுறுத்திச் சீராக்கும் முகமாக; இலங்கையும் இந்தியாவும் முறையே தமது பிரதேசங்களில் இரு நாடுகளினதும் ஒற்றுமைக்கும் அவற்றின் பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் அனுமதிப்பதில்லை, என்ற முடிவை மீண்டும் வலியுறுத்துவதுடன்.

இது தொடர்பாக எடுத்த முடிவில் ஏற்றுக் கொள்வதாகக் கூறிய இந்தியாவினுடைய கருத்துக்கள் பின்வருமாறு :-

(அ) இலங்கை இந்திய நட்புறவிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் உள்ள வெளிநாட்டுப்படைகளின் ஆலோசகர்களைப் பற்றி விரைவாக நீங்களும் நானும் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

(ஆ) இந்தியாவினுடைய விருப்பத்திற்கு மாறாக எந்தவொரு வெளிநாட்டுப் படைகளும் திருகோணமலைத் துறைமுகத்தையோ அல்லது வேறு எந்தத் துறைமுகங்களையுமோ போர்ப்படைகள் பயன்படுத்தாது தடுத்தல்.

(இ) திருகோணமலை எண்ணெய்க் குதத்தினைச் சீரமைப்பதுடன் அதனைப் பயன்படுத்துவதனையும் இலங்கையும் இந்தியாவும் கூட்டாக எடுத்துச் செயற்படுவது.

(ஈ) வெளிநாட்டு வானொலிச் செய்தி நிலையங்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தினைத் திருத்தி அமைத்து அதனைப் பொதுமக்களுக்குரிய ஓர் ஒலிபரப்பு நிலையமாக மாற்றுவதுடன், வெளிநாட்டுப் படைகளுக்குச் செய்தி அனுப்புவதனையோ அல்லது உளவு நடவடிக்கைகளையோ அமைதிக்காது தடுத்தல்.

(2) இதே நோக்கத்துடன்

(அ) இந்தியாவானது, பயங்கரவாத குற்றச் செயல்கள், பிரிவினை அல்லது நாட்டைப் பிரிக்கும் சக்திகளைக் கொண்ட எல்லா இலங்கைப் பிரஜைகளையும் திருப்பி அனுப்பும்.

(ஆ) இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சியும் ஆயுத வசதியும் செய்து கொடுக்கும்.

(இ) இலங்கையும் இந்தியாவும் கூட்டாக ஒரு நிர்வாக நடைமுறையை ஏற்படுத்தித் தொடர்ச்சியாக இரு நாடுகளும் கருதும் நோக்கங்களை பந்தி '1' இல் குறிப்பிட்டது போல -கவனித்து அவற்றை நிறைவேற்றுதல்.

எங்களிடையே ஏற்பட்ட இணக்கத்தை மேலே கூறியவை சரியாக ஏற்படுத்துமா என்பதனை தயவு கூர்ந்து நிச்சயப் படுத்தவும்.

எனது அதி உயர்ந்த கவனிப்பையும் உத்தரவாதத்தினையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள
ராஜீவ் காந்தி.

எங்களிடையே ஏற்பட்ட உடன்பாட்டிற்கு மேலே கூறப்பட்ட அனைத்தும் மிகச் சரியாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துகிறேன்.

எனது அதி முக்கிய கவனிப்பையும் உத்தரவாதத்தையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள
ஜே. ஆர். ஜெயவர்த்தனே.

இக்கடிதப் பரிமாற்றத்தினை அடுத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப் பட்டது. இதனைச் செய்ய முன்பு இந்திய அரசு தமிழர்களுடன் கலந்தாலோசித்ததா? அல்லது இயக்கங்கள் முழு பூரண ஆதரவை வழங்கினா? ஏன், தமிழர் கூட்டணி தான் முழுதாக ஒத்துழைப்பு நல்கியதா?

தமிழர்களுடன் ஒப்பந்தம் பற்றிப் பூரணமாகக் கலந்து ஆலோசிக்க இந்திய அரசு தவறி விட்டது. அதே வேளை இயக்கங்களும் ஆதரவை வழங்கவில்லை. குறிப்பாக ஈரோஸ், புலிப்படை இயக்கங்கள் ஆதரவை வழங்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமானது பலவந்த கட்டாயத்திற்கு உட்படுத்தப் பட்டது. எனினும் அவர்கள் ஒப்பந்தத்தை எதிர்த்தார்கள். இந்தியா தமது முதுகில் குத்துவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டினர். திரு. நீலன். திருச்செல்வமும் பீ.பீ.சி உலக ஒலிபரப்பில், ஒப்பந்தமானது சரியாக உருவாக்கப்படவில்லை. நீண்ட காலப் பிரச்சனைக்கு உடனடியாக ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாது, இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று பேட்டி அளித்தார். இலங்கை அரசு தனது நாட்டு மக்களின் (தமிழர், சிங்களவர், முஸ்லிம்) விருப்பத்தை அறியாமல் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து விட்டு ராஜீவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இத்தனை எதிர்ப்பிற்கும் மத்தியில் இப்படியோர் ஒப்பந்தத்தை இந்தியா ஏன் செய்தது? இதற்கு முதலில் ஒப்பந்தத்தைக் கவனிப்போம்.

இலங்கையின் சமாதானத்தையும் பொது அமைதியையும் நிலைநாட்டுமுகமாகச் செய்யப்பட்ட இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தமானது பின்வருமாறு.

இந்தியக் குடியரசின் பிரதம மந்திரியும் அதியுயர் மதிப்புக்குரியவருமான திரு. ராஜீவ் காந்தியும், மக்கள் சோசலிசக் குடியரசின் இலங்கை ஜனாதிபதியும், அதியுயர் மதிப்புக்குரியவருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் ஆடி 29ம் திகதி 1987 ம் ஆண்டு கொழும்பில் சந்தித்துக் கொண்டதன் நிமித்தம்,

* பாரம்பரியமாக உள்ள இலங்கை இந்திய நட்புறவினை வலிமைப்படுத்தவும் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கும் மிக உயர்ந்த அதி உன்னத முக்கியத்துவம் கொடுக்குமுகமாகவும்-

- இலங்கைச்சிறுபான்மையினரின் பிரச்சனையையும் அது தொடர்பான வன்செயல்களைத் -

-தீர்க்கும் அவசர நிலையையும் இலங்கையில் உள்ள சகல சமூகத்தவர்களின் பாதுகாப்பும் எதிர்கால நலன்களையும் கருத்திற் கொண்டு

இந்த நாளில் மேற்படி நோக்கத்தை பரிபூரணமாக நிறைவேற்றுவதற்காகப்பின்வரும் ஒப்பந்தம் செய்யப்படுகின்றது.

இவைகள்:-

* 1.1- இலங்கையின் ஒற்றுமை, சுதந்திரம் ஆகியவற்றையும், அது ஒரு தனி முழு நாடாக திகழ்வதனையும் பேணிப் பாதுகாத்தல்

1.2- இலங்கையானது பலதரப்பட்ட சிறுபான்மையினருடைய பலமொழிகளைக் கொண்ட ஒரு பன்முகப்படுத்தப்பட்ட சமுதாயம் என்றும், அச்சமுதாயத்தின் பகுதிகளாக சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் உள்ளனர் என்பதனை ஏற்றுக் கொள்ளல்.

1.3- ஒவ்வொரு சிறுபான்மையினரும், தனித்தனியான மொழி, கலாச்சாரங்கள் கொண்டிருப்பதனை அறிந்து அவற்றை அவதானமாகப் பேணிப் பாதுகாத்தல்.

1.4- அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சரித்திர காலம் தொடக்கம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடமாயும், அவர்கள் இப்பகுதிகளில் மற்றைய சிறுபான்மையினருடன் இன்று வரை வாழ்ந்து வருவதனை மீண்டும் தெரிந்து கொள்ளல்.

*1.5- இலங்கையின் இறைமையையும் சுதந்திரத்தையும் அது ஒரே நாடாக இருப்பதற்குரிய ஏதுக்களையும் அதற்குதவும் சக்திகளையும் பலப்படுத்துவதற்கான தேவையை உணர்வதுடன், அதில் வாழும் பல்வேறுபட்ட மத, மொழி, கலாச்சாரங்களை உள்ளடக்கிய சமூகத்தவர்களின் தேவையைப் பூர்த்தி செய்தல்

(2) அதனைத் தீர்த்து வைக்க,

2.1- அடுத்தடுத்து அருகாக அமைந்த இரு மாகாணங்கள் ஒன்று சேர்ந்து ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சியை உருவாக்க அனுமதிக்கும் பிரேரணையை இலங்கை அரசு கொண்டு வரும். அதே வேளை வாக்கெடுப்பு மூலம் வடகிழக்கு பிரிவதனையும் அனுமதிக்கின்றது.

2.2- இந்த இடைக்காலமானது தற்காலிகமானது. பிரதேச சபைக்குரிய தேர்தல் திகதி (2.8ம் பந்தியில் குறிப்பிட்டபடி) வடக்கும் கிழக்கும் தொடர்ந்தும் இணைந்திருப்பதா என்பதனைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்புத் திகதி (2.3ம் பந்தியில் குறிப்பிட்ட படி) வரையிலான இவ்விடைக்காலத்தில் உருவாகும் ஆட்சிக்கு ஒரு ஆளுனரும் ஒரு முதலமைச்சரும் ஒரு மந்திரி சபையும் அமையும்.

*2.3- 31.12.88 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிழக்கு மாகாணத்தில் நிகழவிருக்கும் வாக்கெடுப்பானது பின்வருவனவற்றைத் தீர்மானிக்கும்.

அ. கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் வட மாகாணத்துடன் இணைந்தபடி இருந்து ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சியில் வடமாகாணத்துடன் சேர்ந்து ஆளப்படுவது (பற்றி2.2 இல் குறிப்பிட்ட ஆட்சி) அல்லது

ஆ. கிழக்கு மாகாணம் தனியான ஒரு மாகாண பிரதேச சபையின் ஆட்சிக்குக் கீழ்க் கொண்டு வரப் பட்டு அதற்குத் தனியான ஆளுனர், முதலமைச்சர், மந்திரி சபை அமைவது.

ஜனாதிபதி அவர்கள் தமது விருப்பப்படி விரும்பினால் இந்த வாக்கெடுப்பை ஒத்திப் போட முடியும்.

2.4- வன்முறைக் கலவரங்கள் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ இடம் பெயர்ந்தவர்கள் அனைவரும் இவ்வாக்கெடுப்பில் கலந்து கொள்ளத் தகுதியுடையவர்கள். இடம்பெயர்ந்தவர்களை மீளக்

குடியமர்த்துவதற்குரிய அத்தியாவசியமான சூழ்நிலைகள் ஏற்படுத்தப் படும்.

2.5- வாக்கெடுப்பு நடைபெறும் போது அதனை அவதானிக்கப் பிரதம நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும். அக்குழுவில் இலங்கை அரசினால் பிரேரிக்கப்பட்டு ஜனாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரும் இடம் பெறுவர்.

* 2.6- *வாக்கெடுப்பின் முடிவினைத் தீர்மானிக்க ஒரு சிறிய தொகை மேலதிக வாக்குகளே போதுமானதாகும்.*

2.7- இலங்கையின் சட்டதிட்டங்களுக்கமைய தேர்தல் கூட்டங்களும் பிரச்சார வேலைகளும் வாக்கெடுப்பு நிகழுமுன்னதாக அனுமதிக்கப் படும்.

2.8- பிரதேச சபைக்கான தேர்தல்கள் அடுத்த 3 மாத காலத்துள் நடைபெறும். அதாவது 31.12.87 ற்கு முன்னதாக. பிரதேச சபைக்கான தேர்தல் (வடகிழக்கில்) நடைபெறும் போது இந்திய அவதானிகள் அதனை அவதானிக்க அழைக்கப்படுவார்கள்.

2.9- 15.08.87 அளவில் அவசரகாலச் சட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீக்கப்படும். இவ்வொப்பந்தம் கைச்சாத்தானதும் முழுத் தீவிலும் பரஸ்பர சுமுக நிலை உருவாகும். ஒப்பந்தப் பிரகாரம் போராளிகள் தம்மிடமுள்ள முழு ஆயுதங்களையும் இலங்கை அரசால் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். பரஸ்பர நல்லெண்ணத்தினதும் ஆயுதக் கையளிப்பின் காரணத்தினாலும் இலங்கைக் காவற்படையினர் 25.05.88 முதல் தமது முகாமிற்குள் இருப்பர். சுமுகநிலை ஏற்பட்ட 72 மணி நேரத்துள் ஆயுதக் கையளிப்பும் காவற்படை, முகாமினுள் தங்கியிருப்பதும் நடைபெற்று முடிந்து விடும்.

2.10- *நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே வடகிழக்கு மாகாணங்கள்* இலங்கை அரசின் பாதுகாப்பின் கீழும் சட்ட அமுலின் கீழும் கொண்டு வரப்படுவதற்காக இலங்கை அரசானது தனது ஒழுங்கமைப்புக்களையும் பொறிமுறைகளையும் நெறிப்படுத்தும்.

2.11- பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின்படி, கைதானோர், குற்றம் சாட்டப்பட்டோர், கைதிகள், அரசியற் கைதிகள், அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். இளம் போராளிகளை மீண்டும் தேசிய வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை அரசானது சிரத்தையான முயற்சிகளை மேற்கொள்ளும். இச்செயற்பாட்டிற்கு இந்தியா தனது ஒத்துழைப்பை நல்கும்.

2.12- இலங்கை அரசாங்கம் மேற்கண்ட செயற்பாடுகளை ஏற்று அதன்படி நடக்குமென்றும் மற்றவர்களும் அவ்வாறே செயற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கும்.

2.13- தீர்மானங்களை வரையறுக்கும் கட்ட எல்லைகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இலங்கை அரசானது அதனை அமுலுக்குக் கொண்டு வருவதுடன் இவை தொடர்பான பிரேரணைகளையும் அமுல்படுத்தும்.

2.14- இந்திய அரசானது இத்தீர்மானங்களுக்குக் கைச்சாத்திட்டுப் பொறுப்பு ஏற்பதுடன் உத்தரவாதமும் அளிக்கும். அதேவேளை இத்தீர்மானங்களை அமுல் நடாத்துவதற்கு ஒத்துழைப்பையும் வழங்கும்.

2.15- 4.5.86இல் இருந்து 19.12.86 வரையிலான பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்ட தீர்மானங்களுக்கமைய இத்தீர்மானமானது நிபந்தனைக்குரியது. மேற்கண்ட காலகட்டத்தில் *முடிவு செய்யப்படாத எஞ்சிய விடயங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஆறு மாத காலத்துள் இலங்கை- இந்திய அரசினால் தீர்மானத்திற்குக் கொண்டு வரப்படும்.*

இப்படியாகக் கொண்டு வரப்பட்ட தீர்ப்புகளை அமுல் நடத்த இந்திய அரசு நேரடியாக இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பது நிபந்தனைக்குரியதாகும்.

2.16- இத்தகைய தீர்மானங்கள் கூட இந்திய அரசைக் கட்டுப்படுத்தும் நிபந்தனைக்குரியது. அதாவது போராட்ட இயக்கங்கள் ஏதாவது இத்தீர்மானங்களையும் அதன் எல்லை வரையறுத்தல்களையும் ஏற்காது விட்டால் இந்தியா பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

க.. இலங்கையினுடைய இறைமைக்கும், சுதந்திரத்திற்கும் அதனுடைய முழுமையான (ஒரே-நாடு) பாதுகாப்பிற்கும் விரோதமான ஏதாவது நடவடிக்கைகள் இந்தியப் பகுதியில் உருவாகினால் இந்திய அரசு அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்.

(கா) *தமிழ்ப்போராளிகளின் நடவடிக்கைகளுக்கெதிராக இலங்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் இந்தியக் கடற்படையும் அதன் கரையோரக் காவலர்களும் இலங்கைக் கடற்படையுடன் ஒத்துழைக்க வேண்டும்.*

(கி) இச்சம்பவத்தின் போது இலங்கையானது மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக இந்தியாவிடம் படையுதவி கோரினால் இந்திய அரசானது படையுதவி கேட்கப்படும் போது அவைகளைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்கும்.

(கீ) இலங்கையிலுள்ள இந்தியவம்சாவழியினரை மீண்டும் இந்தியாவுக்கு அழைப்பதனைத் துரிதப்படுத்தும் அதேவேளை இலங்கை அகதிகளைத் தமிழ் நாட்டிலிருந்து திரும்பவும் இலங்கைக்கு அனுப்பி வைக்கும்.

(கு) *வடகிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லா சமூகத்தவர்களையும் பாதுகாப்பதற்கு இலங்கையுடன் இந்தியா ஒத்துழைக்கும்.*

2.17- ஒப்பந்தப் பிரகாரம் வடகிழக்கில் எல்லா சமூகத்தவர்களும் பங்குபற்றி சுதந்திரமாக வாக்களிப்பதனை இலங்கை அரசு உறுதி செய்யும். இது சம்பந்தமாக இந்திய அரசு சகல ஒத்துழைப்பும் இலங்கைக்கு வழங்கும்..

2.18- இலங்கையின் அரசாங்க மொழி

சிங்களமேயாகும். தமிழும் ஆங்கிலமும் கூட அரசகரும மொழியாகும்.

## ஒப்பந்த இணைப்பு

1. மேற்கூறிய 2ம்பந்தியில் குறிப்பிடப் பட்ட வாக்கெடுப்பினைக் கவனிக்க இந்தியத் தேர்தல் ஆணையாளரின் பிரதிநிதிகள் இலங்கை ஜனாதிபதியினால் அமைக்கப்படுவதனை இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டனர்.

2. ஒப்பந்தத்தின் 2.8 ம்பந்தியில் குறிப்பிடப்பட்டபடி பிரதேச சபைக்கான தேர்தலின் போதும் இந்தியப்பிரதிநிதிகள் தேர்தலைக் கண்காணிக்க இலங்கை ஜனாதிபதியால் அழைக்கப்படுவார்கள், என்பதனை இரு நாட்டுத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

3. வடகிழக்கில் இலங்கை அரசபடைகளுக்கு உதவியாக இருந்து வரும் உதவிப் படைகளை (போர்ப்படை அல்ல) திரும்ப அழைப்பதுடன் ஊர்க்காவல் படையையும் (HOME GUARD) கலைத்துச்சுதந்திரமான தேர்தலை நடத்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இணக்கம் தெரிவித்தார்.

4. ஒப்பந்தப்பிரகாரம் போராளிகள் இலங்கை ஜனாதிபதியினால் குறிப்பிடப்பட்ட அங்கீகாரம் பெற்றவர்களிடம் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்பதனை இரு நாட்டின் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர். ஆயுதக் கையளிப்பானது இரு நாட்டினதும் செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் முன்னிலையில் இடம்பெறலாம்.

5. 31.07.87 இல் இருந்த சுமுகமான நிலை நிலவுவதனை இரு நாடுகளினதும் தகுதி பெற்ற குழுக்கள் கண்காணித்து வருவதனை இலங்கை ஜனாதிபதியும் இந்தியப் பிரதமரும் ஏற்றுக் கொண்டனர்.

6. (2.14), (2.16-சி) பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பிரகாரத்தை இரு நாட்டுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். தேவை ஏற்படும் பட்சத்தில் சுமுகநிலையை வலியுறுத்தவும் அவற்றிற்கு உத்தரவாதம் அளிக்கவும் இந்திய சமாதானப் படையானது இலங்கை ஜனாதிபதியால் அழைக்கப்படலாம்.

இப்படிச்செய்யப்பட்ட ஒப்பந்தம் தமிழர்களுக்கு விடிவைத்தருமா? இதன் விளைவுகள் எப்படி இருக்கும்? தற்போது நடப்பவைகள் என்ன? இவைகளை எமது அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.



*With Best Compliments*



**PREMA AGENCY**
**VIDEO FILMMING**

BIRTHDAYS, WEDDINGS,
AND
MOST IMPORTANT DAYS IN YOUR LIFE

JUST CALL US ON
01-531-0337
OR
CALL US AT



23 CHINGFORD ROAD,
WALTHAMSTOW,
LONDON E17 4PW.





# சிறுவர் களஞ்சியம்

## பூனைக்குட்டி

எனக்குப் பூனைக்குட்டி என்றால் மிகவும் விருப்பம்.

அது 'மியாவ் மியாவ்' என்று மீசை வெட்டிப் பாடும்.

அதை பால் வைத்தால் கண்ணை மூடிக்கொண்டு குடிக்கும்.

வாலை ஆட்டிக்கொண்டு எனக்குப் பக்கத்தில் வரும்.

பூனைக்குட்டி பாய்ந்து பாய்ந்து விளையாடும்.

அது விளையாடும் போது நல்ல அழகாக இருக்கும்.

—கீதா. பத்மநாதன்—

## தந்திர வியாபாரி

[illegible]

ஓர் ஊரிலே ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அவன் தினமும் உப்பு மூடைகளைத் தனது கழுதையில் ஏற்றி அடுத்துள்ள ஊர்களுக்கு வியாபாரம் செய்து விட்டுவரும் வழியில் தனக்குத்தேவையான பொருட்களை வாங்கி கழுதையின் முதுகில் சுமந்து வருவது வழக்கம்.

வழமை போல் அன்றொருநாள் அவன் தனது வியாபாரம் முடிந்தவுடன் தனக்குத்தேவையான பொருட்களை வாங்கி வந்தான். அன்று வரும்பொழுது இருள் சூழத்தொடங்கி விட்டது எனவே அவன் அருகில் உள்ள ஒரு மண்டபத்தில் தங்கிவிட்டு அடுத்தநாள் தனது ஊருக்குச் செல்ல எண்ணி அங்கேயே தங்கிவிட்டான். அந்த மண்டபத்திற்கு ஒரு காவல்காரன் இருந்தான். அவனுக்கு கழுதையின் வால்முடி தேவைப்பட்டது. அதனால் அவன் இதுதான் தக்க சமயமென்றெண்ணி கழுதையின் வால்முடி ஒன்றைப் பிடுங்கினான். அதைக்கண்ட வியாபாரி வால் முடியைப் பறிக்காதே அது பொல்லாத கழுதை, உதைத்ததென்றால் பல்போய் விடும் என்று எச்சரித்து விட்டு உள்ளே சென்று விட்டான். அவன் உள்ளே போனதும் காவல்காரன் மீண்டும் கழுதையின் முடியைப் பறித்தான். கழுதைக்கு வலி பொறுக்க முடியாமல் போகவே தனது பின்னங்காலால் படார் என உதைத்து விட்டது. காவல்காரனும் தூரச்சென்று விழுந்தான். அவனுடைய முன் பற்களும் உடைந்து விட்டன. உடனே அவன் ஊர் பெரியவரிடம் சென்று முறையிட்டழுதான்.

ஊர் பெரியவரும் இருவரையும் அழைத்து விசாரித்தார். காவல்காரன் பெரியவரைப்பார்த்து, ஐயா இந்த வியாபாரி பொல்லாத கழுதை ஒன்றை வைத்திருக்கின்றான். அது என்னை உதைத்துவிட்டது. இதனால் என்னுடைய பற்கள் உடைந்து விட்டன என்றான். பெரியவரும் வியாபாரியைப் பார்த்து "உன்னுடைய கழுதை இவனை உதைத்து விட்டதாம் உண்மைதானா?" என்று கேட்டார். வியாபாரி பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றான். பெரியவர் வியாபாரி என்ன ஊமையா எனக் கேட்டார். உடனே காவல்காரன் இல்லை ஐயா இவன் நன்றாகப் பேசுவான் என்றான். பின்பு வியாபாரியின் பக்கம் திரும்பி, ஐயா கேட்கிறார் பதில் சொல்லேண்டா, கழுதையின் முடியைப் பறிக்காதே, பொல்லாத கழுதை உதைத்ததென்றால் பல்போய்விடும் என்று நேற்று மட்டும் என்னிடம் கத்தினாயே இன்று உனக்கு என்ன நடந்தது? வாயில் கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய் என இரைந்தான். அவன் சொன்னதைக் கவனமாய்க் கேட்ட பெரியவர், பொல்லாத கழுதை வால் முடியைப் பிடுங்காதே என வியாபாரி முதலிலேயே எச்சரித்தாரா? எச்சரித்தும் நீ ஏன் கழுதையின் வால்முடியைப்பிடுங்கினாய்? அதனால்தானே உனக்குப் பல் உடைந்தது. உனக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. என்று சொல்லி வியாபாரியை விடுதலை செய்தார்.

வியாபாரியும் பெரியவரை வணங்கி உண்மை அவன் வாயாலேயே வெளிவரவேண்டும் என்றே நான் ஊமை போல இருந்தேன். இதற்காக என்னை மன்னியுங்கள் என்று சொல்லி விடை பெற்று தனது ஊரை நோக்கி சென்றான்.

## MY TAMIL SCHOOL

My name is Nagarajah Nishanthan.
I am ten years old.
I go to Tamil school every saturday held in Greenleaf Primary school in Greenleaf road, Walthamstow, East London.
I am studying in grade two.
My Tamil teacher is Mani Pathmanathan and my miruthangam teacher is Mr. Sivarajah.
There are ten boys and eleven girls studying in my class.
I have a younger brother Parthiban studying in grade one.
My father brings us to the Tamil school in the morning and my mother takes us back home after the school.
I go to Tamil School to learn the Tamil Language and its culture.
The school starts at 9.30 am with prayers followed by learning the language and finishes with learning cultural events such as Miruthangam and Dance "Bharatha Natyam".
We have refreshments in between.
The Tamil school celebrates Annual Tamil Festivals such as "Thai Pongal" performing speeches and cultural shows.
Hence my Tamil School teaches the Tamil Language and its culture to Tamils living in and around East London.

*-NIRSHANTHAN NAGARAJAH. (age 10 )*

## MY PEN PAL

My penpal's name is Namio-Leo.
She is an Australian girl.
She lives in Camden Haven in Australia.
She is nine years old.
Namio has blond hair and blue eyes.
She has a little sister called Rosemary.
Namio's hobbies are swimming and writing.
Her best game is ladders.
She sends me Australian stamps and picture cards.
Namio is a Brownie.
We write to each other very often.
I hope I get a chance to see her one day.

*- Tara.Pathmakanthan. (Age 9)*

## MY GARDEN

My garden is small and messy.
It has got old broken windows and a broken table.
It has got four small bean stalks, there used to be five bean stalks one died.
There are two big rose bushes one is orange and the other is white.
Near the bean stalks there is a tree.
The tree has no fruits but in spring it flowers, next to it is a very big bush.
The bush has got a birds nest in it. When birds lay eggs and after they hatch the baby birds go and sit on the tree next to the bush.
In summer butterflies lay eggs on the tree, when the eggs
turn into caterpillars the caterpillars eat the leaves off the tree.
When the caterpillars turn into butterflies, the new butterflies come back the year after and lay more eggs.
At the end of the garden there is a big brown wall roughly 3 meters tall.
On the other side of the wall is a British Telecom Exchange.

*-MUHUNTHAN. SHANTHIKUMAR. (Age 10 )*

## குறுக்கெழுத்துப் போட்டி இல 6- வினா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |

## குறுக்கெழுத்துப் போட்டி இல 5-விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம் | 2 த | 3 | 4 பா | 5 ஞ் | 6 சா | 7 லி | 8 | 9 கா |
| 10 க | 11 லை | 12 | 13 ர | 14 | 15 வி | 16 ச | 17 ம் | 18 ன |
| 19 ல | 20 | 21 இ | 22 த | 23 ழ் | 24 | 25 | 26 | 27 க |
| 28 உ | 29 தி | 30 ர | 31 ம் | 32 | 33 வ | 34 ஞ் | 35 ச | 36 ம் |
| 37 | 38 | 39 வி | 40 | 41 | 42 ண | 43 | 44 ஞ் | 45 |
| 46 சு | 47 மை | 48 | 49 க | 50 ரு | 51 க் | 52 க | 53 ல் | 54 |
| 55 | 56 உ | 57 ளை | 58 ரு | 59 | 60 க | 61 ர் | 62 ம | 63 ம் |
| 64 | 65 | 66 ப | 67 ட | 68 ட் | 69 ம் | 70 ண | 71 | 72 ன |
| 73 அ | 74 ர | 75 ச | 76 ன் | 77 | 78 | 79 ன் | 80 வ | 81 சி |

### இடமிருந்து வலம்

1. ....மழை பொழிந்தால் ஆத்துக்குக் கொண்டாட்டம்.

6. ... அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.

11. திருடர்கள் தமது கைவண்ணத்தைக் காட்ட இம்முறையையும் கையாள்வர். (குழம்பியுள்ளது)

22. சரஸ்வதிதேவியின் மாமியார் இதற்கு அதிபதியாவள். (குழம்பியுள்ளது)

33. குழந்தைகளுக்கு ஊட்டச் ....மிகுந்த கவனமெடுத்தல் வேண்டும். (இங்கு ஓர் எழுத்து விடுபட்டுள்ளது.)

37. மனச்சாட்சியைக் கொல்லும் எந்த மானிடனும் இவனாகிறான்.

41. இது பதுங்குவது பாய்வதற்கே, ஈழத்தில் எப்படியோ?

44. இது நம்ம ஆளு படத்தில் இந்த வேடத்தைப் போடப்படும் பாடு சொல்லும்தரமன்றே?

55. மானிடப்பிறப்பில் இதுவுமின்றிப் பிறத்தல் மேன்மையன்றே. (குழம்பியுள்ளது)

61. ....தம்மை இழிவு செய்யும் மடமையை ஒழிப்போம். (குழம்பியுள்ளது)

67. கண்ணனின் தோழரின் மனைவி இவளாவாள்.

73. .....தொழுவது சாலவும் நன்று. (குழம்பியுள்ளது)

79. இங்கு இதை வைத்திருப்பவர்களை "லான்ட் லோர்ட்" என்றழைப்பார்கள்.

### மேலிருந்து கீழ்

1. ...ல்லை ...ப்பதின் எதிர்ச்சொல் இது.

2. இசைக்கு மறுபெயர் இதுவாகும்.

3. சாளரம்.

4. இலங்கை அரசாங்கம் பாடசாலைமாணவர்களுக்கு இதனை இலவசமாகக் கொடுக்கின்றது. (குழம்பியுள்ளது)

6. வாசனை.

8. அன்னை தந்தையை வலம்வந்து அகிலம் எனக்கூறி மாங்கனியைத் தமக்காக்கிக் கொண்டவர்.

10. பரதம்.

35. நீரிழிவு. (குழம்பியுள்ளது)

37. கன்றை இழந்த பசுவின் நிலையை தானுணர்ந்தன்....மீது தேரோட்டினன் சோழ மன்னன். (குழம்பியுள்ளது)

41. இவர் இளமைப் பெயர் சித்தார்த்தர்.

46. கண்டறிதலை இப்படியும் கூறலாம்.

53. இங்குள்ள தமிழர் இதைவிடுத்து "மம்மி" என்றழைப்பதையே பெரிதும் விரும்புகின்றனர். (குழம்பியுள்ளது)

59. கர்வம் (குழம்பியுள்ளது)

# மங்கையர் மஞ்சரி

வாசகர்களே!

இவ்விதழிலிருந்து மங்கையர் மஞ்சரி என்னும் சிறப்புப் பகுதியை ஆரம்பிக்கின்றோம். தரமான ஆக்கங்கள் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. இம்முறை திருமதி. சாரதா. சிவஞானசுந்தரம் உணவு தயாரிக்கும் முறையை ஆரம்பித்து வைக்கின்றார்.

— ஆசிரியர் —

## சமைப்போம் சுவைப்போம்

### சீனிச்சம்பல்

½ இருத்தல் வெட்டிய வெங்காயம்
4 கராம்பு
4 ஏலம் (பிளந்த)
1 அங்குல நீளத்துண்டு கறுவா
1½ தேக்கரண்டி செத்தல் மிளகாய்ப் பொடி
2 தேக்கரண்டி சீனி
3 மேசைக்கரண்டி விருக்கிரி.
2 மேசைக்கரண்டி எண்ணெய்
உப்பு நீர்
சிறிது கறிவேப்பிலை

வெங்காயம், கராம்பு, ஏலம், கறுவா, உப்புநீர் முதலியவற்றை தாச்சியில் போட்டு மிகவும் மெல்லிய நெருப்பில் சற்று நீர் வற்ற மூடி விடவும். பின் எண்ணெயை விட்டு வதக்கி அதன் பின் மிளகாய்ப் பொடி, சீனி, விருகிரி முதலியவற்றைப் போட்டுச் சுருள விட்டு இறக்கி விடவும். (சூடு ஆறிய பின் ஈரமில்லாத போத்தலிற் போட்டு வைத்தால் - பல வாரங்களுக்குக் கெட்டுப் போகாமல் இருக்கும்)

### பூரி

1 டின் கோதுமை மா
1½ மேசைக்கரண்டி நெய் (அல்லது பட்டர்)
சிறிது உப்பு
பொரிப்பதற்குப் போதிய எண்ணெய்.

மாவில் உப்புப் போட்டுத் தண்ணீர் விட்டு இறுக்கமாகவும் அழுத்தமாகவும் பிசைந்த பின் நெய்யை விட்டுப் பிசையவும். பிசைந்த மாவைச் சிறு உருண்டைகளாக்கி மாப்பூசிய பலகையிலிட்டு உருட்டி 3 அங்குல விட்டமுடைய மூடியால் வெட்டி எடுத்துக் கொதிக்கும் எண்ணெயிற் போட்டுப் பொங்கிப் பொரிந்ததும் மறு பக்கம் திருப்பி விட்டு இரு பக்கமும் பொரிந்தபின் வடித்து எடுக்கவும்.

# வாசகர்கள் எழுதுகிறார்கள்

* ஆசிரியப் பெருந்தகைக்கு ,

காற்றினிலே அலையாகத் தவழ்ந்த ஓசையின் நாதத்தை நுகர்ந்தவர்களில் நானும் ஒருவன். எம்முடன்பிறப்புக்களில் சிலர் ஈழத்திரு நாட்டின் நிகழ்வுகளை உணராதவர்கள். அவர்களுக்கும் ஊக்கம் ஊட்டுகிறது உங்கள் பேனா முனை. அதற்கு எனது மதிப்புக் கலந்த வணக்கங்கள். உங்கள் பணி சிறக்க என் வாழ்த்துக்கள்.

. இரா. மோகன் .

* ஆசிரியருக்கு, ஜானு ராணியின் இலங்கையும் அந்நிய சாத்திர நாடுகளும் என்ற கட்டுரை மிகவும் குறுகி விட்டதே? காரணம்யாதோ?

. சிவானந்தன் .

* அன்பு ஆசிரியருக்கு,

மைக்கல் கொலினின் உணர்வு மிக்க கவிதைகள் ஈழத்தமிழனின் வேதனையிலும், விரக்தியிலும் கூடச் சுதந்திர தாகத்தின் பெருமூச்சை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. நாங்கள் இங்கிருந்தாலும் எங்கள் உள்ளம் ஈழத்தில் தான்.

. பாஸ்கர் .

* அலை ஓசை ஆசிரியரே?

உங்கள் விமர்சகர்களுக்குப் புதிய படங்களின் விமர்சனங்கள் எழுதப் பிடிப்பதில்லையா? அடுத்து முறை பராசக்தி, பாகப் பிரிவினை எழுதுவீர் போலும்.

. சுகன் .

* ஆசிரியர் அவர்கட்கு,

அவனி அகழில் 'தலைவர்களின் பார்வையின்' என்ற பக்கம் மிக அருமையாக இருந்தது. ஒரே பார்வையில் எமது தலைவர்களின் உள்ளப் பாங்கை வெளிப்படுத்தியமைக்கு எமது நன்றிகள். அத்துடன் ஈழத்துச் செய்திகளைத் தொகுத்துப் பிரசுரித்தால் அது எமக்குப் பெரும் உதவியாக அமையும். நீங்கள் எழுதுவது போதாதே.

. பிரியதர்சினி .

* ஆசிரியருக்கு,

தங்கள் சிறுவர் களஞ்சியம் சிறுவர்களுக்கு மட்டுமன்றி வயது வந்தவர்களுக்கும் பயன்படக்கூடியதாக அமைந்துள்ளது. தொடர்ந்தும் இத்தகைய ஆக்கங்களைப் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

. காயத்திரி .

* ஆசிரியரே,

உங்களுடைய பூசைக்குயில் உண்மையிலேயே கூவுகிறது. அக்குயிலைப் பேட்டி கண்ட உங்கள் நிருபருக்கு எமது வாழ்த்துக்கள். அத்துடன் படங்களும் படு ஜோர்.

"கீப் இற் அப்"

. ரொற்றினத்தான் .

# பிர(ரே)மை

தமிழ்நெஞ்சன். இரா, மோகன்



என்னடா சுரேஷ் மூண்டரை ஆகியிட்டுது, இண்டைக்கு டியூட்டிக்கு போகேல்ல போல கிடக்கு, என்று கேட்டபடி தனது சைக்கிளையும் சுரேசின் சைக்கிளுடன் சாத்திய வண்ணம் அவன் உட்கார்ந்திருந்த மதில்கட்டில் வந்தமர்ந்தான் பவன். இல்லை பவன் இண்டைக்கு எனக்கு மனசு சரியில்லை. உனக்கு தரிசனம் கிடைச்சிட்டுது போல கிடக்கு, அதுதான் இவ்வளவு சந்தோசம் போல.

இருக்காதா பின்னை, நான் ஒண்டோட மட்டும் மினக்கடுகிறன். உன்னை மாதிரி எல்லாத்துக்குப் பின்னாலையும் சுத்திறனே?. இது பவனின் குத்தல்..

* * * * * * * * *

அது ஒரு மிகப்பெரிய மகளிர்பாடசாலை மாலை மூன்றுபத்திற்கு காளையர்கூட்டம் அப்பாடசாலையைச் சுற்றி அலைமோதும். சிலர் தம் முயற்சியில் வெற்றியடைந்திருப்பர் இன்னும் சிலர் முயற்சி செய்து கொண்டிருப்பர், சிலர் கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பர்.

இதில் சுரேஷ் சற்று வித்தியாசமானவன். அவன் பலமரத்துப் பறவை. ஒன்றைக் கூட நிரந்தரமாய் காதலித்ததில்லை. அதை அவன் விரும்புவதுமில்லை. ஆனால் அவன் அவனது முக வசீகரமோ என்னவோ சில பெண்களுக்கு அவன் மேல் ஓர் ஏக்கம். அவனோ பொழுது போக வேண்டும் என்பதற்காகச் சுற்றுபவன் ஆனால் இன்று வாடிய முகத்துடன் இருந்த சுரேஸைக் கண்ட பவனுக்கு ஒரே ஆச்சரியம் சுரேஷ் என்ன மச்சான் நடந்தது என்னட்ட சொல்லு மச்சான். பவன் கேட்டான்.
இல்ல இண்டைக்கு ஒருத்தியக் கண்டனான், அவள் உன்ரை ஆள் உமாவின்ரை கிளாஸ்மேற் போல கிடக்கு, இண்டைக்குத்தான் அவளை முதன் முதலா கண்டிருக்கிறன்..
தலையை ஒரு பக்கம் சரிச்சுக்கொண்டு ஒரு கையிலை குடை, மற்றக்கையிலை புத்தகத்தை அணைச்சுக்கொண்டு நடந்து வந்தாள் ஒரு நடை, அப்பப்பா! என்ன லெவல்? இன்னும் என்ரை கண்ணுக்குள்ள நிக்குது பவன். அவள் ஆரெண்டு தெரியேல்லை, அது தான் யோசித்துக் கொண்டிருக்கிறன்.

சரி, சரி விளங்குது, விளங்குது, நீ அவளை லவ் பண்ணிறாய்? அவளின்ரை டீற்றெயில் உனக்கு வேணும், அவ்வளவு தானே? கவலையை விடு. அவள் உமாவின்ரை கிளாஸ்மேற்றாக இருந்தால் நாளைக்கு அவளின்ரை சாதகம் உன்ரை கையிலை ஓ.கே.? பிளீஸ்டா எனக்காக இந்த உதவியை செய்.

மறுநாள் சுரேஸ் பாடசாலை வாயிலுக்கு சென்றான். முன்போல எல்லோரையும் பார்பதற்காக அல்ல, நேற்றிலிருந்து அவனிதயத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட அந்த அழகுச்சிலையைக் காண்பதற்காக. அவளைக் கண்டான். ஆனால் அவள் இவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எல்லாப் பெண்களையும் ஒரே கண்ணோக்கில் பார்த்த சுரேஸிற்கு அவள் சற்று வித்தியாசமாகவே தோன்றினாள். அவனுள் காதல் வளர்ந்தது. பவனும் உமாவின் தரிசனம் கிடைத்த திருப்தியில் சுரேஸிடம் வந்தான் சுரேஸ் ஒரு குட் நியூஸ், சுரேசும் மிக ஆவலுடன் பவனின் கையைப் பிடித்த வண்ணம் என்னடா? சொல்லுடா மச்சான் என்று கெஞ்சினான். சொல்லுவன் எனக்கு ரீயும், வடையும் வாங்கித்தரவேணும் என்றான் பவன். பறக்காதை முதல்ல விசயத்தைச் சொல்லு. இது சுரேஸ்.

அவளின்ரை பெயர் குமுதினி, கொழும்பிலை இருந்து அகதியாக இங்கு அம்மாவுடன் வந்திருக்கிறாளாம். நல்ல கெட்டிக்காரியாம், யாருடனும் அவ்வளவாக கதைப்பதில்லையாம். தகப்பன் கொழும்பில நகைக் கடை வைச்சிருக்கிறாராம். இவ்வளவுதான் இப்ப தெரியும். பவனும் மூச்சு விடாமல் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். தாங்ஸ் பவன், தாங்யூ வெரி மச் சொன்ன சுரேஸ் அவளின் திருநாமத்தை உச்சரித்த வண்ணம் மலாயன் கபேயை நோக்கி நடந்தான் பவனுடன்.

* * ** ** ** ** ** **

சுரேசும், பவனும் ஒரே கல்லூரி மாணவர்கள் இருவரும் ஏலெவல் பரீட்சை முடிவுகளை எதிர் நோக்கிய வண்ணம் காத்திருந்தனர். பவனுக்கு அவனுடைய காதல் நிறைவேற எந்தத் தடையும் இருக்கவில்லை. ஆனால் சுரேசிற்கு காதலில் எல்லாம் நம்பிக்கை இல்லாமல் இருந்து வந்தது. காதல் காமத்திற்குத்தான் என்று வாதாடுவான். உண்மைக் காதல் காமத்தை விரும்பாது என்பதை அவனுணர்ந்தானில்லை. ஆனால் இப்பொழுது சுரேஸ் ஊண், உறக்கமின்றி அலைந்து கொண்டிருந்தான், குமுதினியை நினைத்து. அன்று மதிய இடைவேளையின் போது கல்லூரி வாசலில் தனிமையில் நின்று கொண்டிருந்த குமுதினியுடன் பேச்சுக்கொடுப்பதற்காக அவளினருகில் சென்றான். சுரேசைக் கண்ட குமுதினி வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள். சுரேஸ் மனம் தளரவில்லை. அனுபவப்பட்டவனாயிற்றே. சுரேசும் விடவில்லை, கோயில், ரியூசன் என்று அவளுக்குப் பின்னால் தொடர்ந்தான். சுரேஸ் உன்னோடை ஒரு விசயம் கதைக்க வேணும் என்றபடி வந்தான் பவன்.

உமா வந்து சொன்னாள், குமுதினி சொன்னதாக "உன்னை தனக்குப் பின்னால் திரிய வேண்டாம் என்றும், உன்னைக் கண்டால் தனக்கு அருவருப்பாக இருக்குது என்றும் சொன்னாளாம். சுரேஸ் ஒரு முடிவுக்கு வந்தவனாக மௌனமாக நகர்ந்தான். இன்று எப்படியும் குமுதினியுடன் கதைத்து விடவேண்டும் என்ற முடிவோடு அது. அவளுக்காக காத்திருந்து குமுதினி ஒரு நிமிடம் என்றான். அவள் உடனே செருப்புப்பிய்யும் என்று சொன்னாள். சுரேசிற்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது.

சுரேஸ் பிரத்தியேக வகுப்பொன்றுக்கு மாலை வேளைகளில் செல்பவன். அதுவும் பெற்றோரின் கட்டாயத்தின்பேரில். அன்றும் வளமைபோல வகுப்பினுள் சென்றவன் தனது சகமாணவி ஒருத்தியுடன் குமுதினி அளவளாவிக்கொண்டிருந்ததைக் கண்டதும் வெளியே திரும்ப எண்ணியவனை கலோ சுரேஸ்' என்ற குரல் தடுத்தது. வேறு யாருமல்ல சுரேசின் சக மாணவி பிரவீணாதான். "என்ன வந்தவுடன் போறீங்கள்"? இல்லை நீங்கள் கதைத்துக்கொண்டு இருந்தீர்கள் அதுதான் என்று விழுங்கினான். அதுக்கென்ன ஆ வந்து இவ என்ரை புது பிரண்ட், பெயர் குமுதினி, இவர் என்ரை கிளாஸ்மேற் சுரேஸ், என்று இருவரையும் அறிமுகப்படுத்தினாள் பிரவீணா. இருவர் முகத்திலும் புதிதாக அறிமுகமாகும் பாவம் இருக்காததைக் கவனித்த பிரவீணா "ஓ' எற்கனவே தெரியும் போல கிடக்கு" என்றாள். இல்ல எதிர்பாராத இடத்தில் சந்திச்சிட்டம் என்று சொன்னான். சுரேஸ். எப்பிடி சொல்லுங்கோ சுரேஸ் இன்ரேஸ்ராக இருக்குது. உடனே சுரேஸ் நீங்க என்னை செருப்பால அடிச்சிருக்கலாம், அடிக்காதது தான் எனக்கு சரியான கவலை. என்று சொன்னான் குமுதினியைப் பார்த்து. அப்படியா குமுதினி சொன்னனீங்கள் என்று குதுக்கிட்டாள் பிரவீணா. "சுரேஸ் நல்ல போய்( )எல்லோரோடையும் சகஜமாய் பழகுவார். அப்படி பிழையான ஆளில்லையே?" என்றாள் பிரவீணா. சுரேசிற்கு உள்ளூர சந்தோசம். குமுதினிக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

மறுநாள் பாடசாலையில் இருந்து வரும்வழியில் "சுரேஸ் ஒரு நிமிடம்" என்ற குரல் கேட்டு திகைப்புற்றவனாய் திரும்பினான், குமுதினி தலையைக் குனிந்த வண்ணம் இண்டைக்கு நேரத்தோடை ரியூசன் கிளாசுக்கு வருவீங்களா? உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும் ஓம் வாறன், வாறன், சுரேஸிற்கு தான் அந்தரத்தில் பறப்பது போன்றதொரு பிரேமை

"கண்ணின் கடைப்பார்வையை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்சருகாம்." ரியூசன் வகுப்பறையில் ஒருவருமே இல்லை. குமுதினிமட்டும் தனியே நின்றுகொண்டிருந்தாள். "ஏன் என்னை வரச் சொன்னனீங்கள்?" சுரேஸ் தான் ஆரம்பித்தான். "என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ சுரேஸ் அண்டைக்கு அப்பிடி ஏசினதுக்கு. சில பிள்ளைகள் உங்களைப்பற்றிக் கூடாமல் கதைச்சினம் அதுதான் அண்டைக்கு......" பரவாயில்லை இப்பவாவது என்னைப்பற்றி தெரிஞ்சு கொண்டீர்கள். அது சரி இதுக்குத்தான் நேரத்துடன் வரச்சொன்னனீங்கள்? இல்ல உங்களை ஏசினதுக்கு பிராயச்சித்தமாக ஏதாவது செய்ய வேணும் போல கிடக்கு. என்ன செய்யப்போகிறீர்கள் சொல்லுங்கோ அவன் கேட்டது தான் தாமதம் அவனது பின்னம்கையில் ஓர் அச்சார முத்தம் உதிர்த்தாள், குமுதினி. இப்போது இது போதும் என்று சொல்லிவிட்டு சிட்டாகப்பறந்து விட்டாள் சுரேஸ் தான் பிறப்பின் பயனை அடைந்து விட்டதாக நினைத்தான். இவர்களது சந்திப்பு தங்கு தடையின்றி தொடர்ந்தது. இருவரும் ஒருவர் இல்லாவிட்டால் மற்றவர் இல்லை என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

"பார்க்கும் இடமெல்லாம் உன்னைப்போலவே பாவை தெரியுதடி என்ற விஞ்ஞானத்தால் கூட மாற்ற முடியாதது இதயத்தின் கீதம். அதை உண்மை என்று நம்பினான் சுரேஸ், குமுதினியைச் சந்தித்தபின். இதற்கிடையில் குமுதினியை, குமுதினியின் தந்தை வெளிநாடு சென்று படிக்க மும ஏற்பாடும் செய்து விட்டார். இதை குமுதினி வன்மையாக மறுத்தாள் கெஞ்சினாள், ஆனால் அவர் இணங்கவில்லை.



சுரேஸிடம் சென்று கதறினாள். சுரேஸ் உங்களை விட்டு பிரிந்து போக மாட்டேன். உங்களை விட்டு ஒரு நிமிடம் கூட என்னால் இருக்க முடியாது. சுரேஸ வாங்க சுரேஸ் நாங்க எங்காவது ஓடிப்போவம். இவ்வளவையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சுரேஸ் "குமுதினி பிளீஸ் நான் சொல்லுறதைக் கவனமாகக் கேளும், இப்ப நாங்க இருக்கிற நிலையில ஒன்றுமே செய்ய முடியாது. படிக்கத்தானே போகப்போறீர், நல்ல விடயம் தானே கண் மூடி முழிக்கிறதுக்குள்ள இரண்டு வருடம் தாண்டிப்போயிடும், அழாமல் போய் வாரும்

நான் ஒருகிழமைக்குப் பிள்ளைக்கு மூன்று கடிதங்கள் என்ற வகையில் போடுவன்.

இல்லை நாலு கடிதம் போடவேணும் என்ன? என்னை மறந்திருவீங்களோ? சுரேஸ் அடி பயித்தியமே உன்னை நான் மறந்திட்டு எப்பிடி உயிரோடு இருப்பன். என்னை நினைப்பீங்களா? சுரேஸ் உன்னை மறந்தாத் தானே நினைக்கிறதுக்கு. எவ்வளவோ சமாதானங்களுக்குப் பின் அரைமனதாக சம்மதித்தாள். லண்டன்செல்வதற்கு. சுரேஸ் ஆகயத்தை வெறித்துக் கொண்டிருந்தான். இரண்டு மாதங்களாக கடிதங்கள் சரமாரியாக வந்து போய்க்கொண்டிருந்தன.

இரண்டு மாதங்களுக்குப் பின் குமுதினியிடம் இருந்து எவ்வித பதிலும் வரவில்லை. குமுதினியோ பீ.எம்.டபிள்யூ. காரில் ஓர் பணக்கார வலிபனுடன் தோளில் தலைசாய்த்த வண்ணம் சென்று கொண்டிருந்தாள். சுரேஸ் குமுதினியின் கடிதத்தை எதிர்பார்த்த வண்ணம் காத்திருந்தான்.

எதிர் தேனீர்கடையில் இருந்த வானொலியில் இருந்து வந்த பாடல் சுரேஸைக் கவர்ந்தது,

"ஆசை நெஞ்சமே அலைமோகம் கடல்
மீது நானே
அசைந்தாடும் கலம் போல ஆனேன்" என்ற

(இந்தக் கதையில் இடம் பெற்ற பெயர்கள் யாவும் கதாசிரியரின் கற்பனையே)


********************************************************

வோல்தம் பொறஸ்ற் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள்





# ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்,பாரிஸ்



பரபரப்பான பாரிஸ் நகரில் சுமார் 50,000 இந்துக்கள் வாழுகிறார்கள். அவர்களெல்லாம் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறியிருக்கின்ற போதிலும் தமது கலை,கலாச்சாரங்களை இன்னும் பேணிக் காக்கிறார்கள். அதற்குதாரணமாக அங்கு வாழும் இந்துக்கள் வழிபாடு நடத்த தனியான ஆலயமொன்று வேண்டுமென்ற கோரிக்கை அந்நாட்டின் சமய கலாச்சார அமைச்சரின் கவனத்திற்கு முதன்முறையாக கொண்டு வரப்பட்டதன் விளைவாக 1985ம் ஆண்டு தைப்பூசத் திருநாளில் பாரிசில் இந்த விநாயகர் ஆலயம் உதயமாகியது. அன்றிலிருந்து இங்கு கோயில் கொண்டருளியிருக்கும் ஸ்ரீ மாணிக்க விநாயகப் பெருமானுக்கு ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் முறையான பூசைகள், ஆராதனைகள், நடைபெற்று வருகின்றன. அங்குள்ளவர்களால் மேற்படி ஆலயம் புனிதமாகப் பேணப்பட்டு சகல பூசை, பிரார்த்தனைகளும் 122,

மண்டபத்தில் நடாத்தப்பட்டு வருகின்றன. ஆலய பரிபாலன சபையின் தலைவராக திரு.வி.சந்திரசேகரம், பணியாற்றி வருகிறார். இவரது பணி ஆலயத்தின் ஒவ்வொரு அபிவிருத்திக்கும் மகத்தானதாக இருந்து வருகிறது. இவர், இலங்கையிலிருந்து கொண்டு சென்ற விநாயகர் விக்கிரகமே மேற்படி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது தினசரி பூசை வழமை போல் மாலை 8.00 முதல் 8.30 வரை நடைபெறுகிறது. பாரிஸ் நகரில் விநாயகருக்கு ஆலயம் உருவாக்கப்பட்டு இந்து 'மதம்' அங்கு பரவி விட்டதை 19ம் நூற்றாண்டில் இந்து மதம் புத்துயிர் பெற்ற வளர்ச்சியுடன் ஒப்பிடலாம்.

---

காலங்களே தருகின்றன. அவையே பறிக்கின்றன. காலங்களே சிரிக்கச் செய்கின்றன. அவையே அழவும் வைக்கின்றன. காலம் பார்த்துக் காரியம் செய்தால் பூமியையே விலைக்கு வாங்கலாம். காலங்களிலேயே காரியங்களின் வெற்றி தோல்விகள் அடங்கி இருக்கின்றன.

— கவியரசு கண்ணதாசன் —

அன்பு கூட சில வேளைகளில் அம்புகளைப் போலக் குத்தும் தவறுமெனில் அன்பையோ நான் நம்பப் போவதில்லை.

—சிபிலா—

மனிதனின் மிகவும் குறைந்த பட்சத் தேவை நிம்மதி. அதைத் தெய்வத்திடம் இருந்து பெற்றுக் கொள்பவனுக்குப் பெயர் தான் இந்து.

—கவியரசு. கண்ணதாசன்—

இரண்டு பெண்களை ஒற்றுமையாக்குவதை விட முழு ஐரோப்பாவையும் நான் இலகுவில் ஒற்றுமைப்படுத்துவேன்.

—16ம் லூயி மன்னன்—

ஒவ்வொரு மனிதனும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டிய கலை ஒன்றிருக்கிறது. அது தான் சிந்திக்கும் கலை. தானாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெறாதவர்களை ஏன் மனிதன் என்ற பெயர் கொண்டு அழைக்க வேண்டும்.

—டி.எஸ்.கோல்ட்ரிஜ்—

# தலைவர்களின் பார்வையில்

திருமதி. சிறிமா. பண்டாரநாயக்கா.



இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினால் இந்தியாவுக்கு பிறநாட்டு ஆக்கிரமிப்புக்கள் ஏற்படுமென்ற அச்சத்தினால்இந்திய, சமாதான ஒப்பந்தத்தை தாமாகவே முன் வந்து கைச்சாத்திட்டுக் கொண்டது. இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்க்கவும், பிரபாகரனைச் சந்திக்கவும் இந்திய அமைதிப்படை இங்கு வரவில்லை. வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு பயந்தே சமாதான ஒப்பந்தத்தை மேற்கொண்டது. இன்றுள்ள பிரச்சனைக்கு ஆயுதத்தாலோ, குண்டுகளாலோ தீர்வு காண முடியாது. வடக்கு கிழக்கிலுள்ள இளையர்களுடன் நியாயபூர்வ பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதைவிடுத்து அடக்கு முறைகளைக்கையாளுவதால்தான் இவ்வளவு பிரச்சனையும் ஏற்பட்டுள்ளன. நான் நிச்சயமாக வடக்கு, கிழக்கு, இளையர்களுடன் நியாயபூர்வமாக பேச்சுவார்த்தை நடத்தியே தீருவேன். அதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.

திரு. வே. பிரபாகரன்.



தமிழ்மக்களின் நலனை விலைபேச மறுத்த நாங்களா துரோகிகள். எமது விடுதலைப் போராட்டத்தை ஆதரித்த இந்தியா இப்போது எங்களைத் துரோகிகள் என்கிறது. இந்திய நகரங்களில் குண்டு வெடிக்கச் செய்யப்போகின்றோம் என்று பொய்த் தகவல்களை வெளிப்படுத்தி மாசு கற்பிக்க சிலர் முயலுகின்றார்கள். நாங்கள் சொல்லாத, இல்லாத விடயங்களை எல்லாம் பெரிது படுத்தி கூப்பாடுபோடப்படுகின்றது.

நாம் தமிழ் மக்களின் நலனிலேயே அக்கறைகொண்டிருப்பதனால் எம்மை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

றொனி டி மெல்.



"மூவாயிரத்துக்கு மேல் இராணுவத்தை வைத்திருக்க ராஜீவ் விரும்பவில்லை'. உரிய காலத்தில் தேர்தல் நடக்க வேண்டும். 1987டிசம்பருக்கு முன் நாட்டில் அமைதியை ஏற்படுத்திவிட்டு இந்திய இராணுவத்தை வாபஸ் பெறவே இந்தியப்பிரதமர் ராஜீவ் விரும்பியிருந்தார். விடுதலைப் புலிகள் அடம்பிடிப்பதால் மட்டும்அல்ல, அரசுக்குள் உள்ள சக்தி வாய்ந்த சிலரின் சதிநாச வேலையின் காரணமாகவும் நாட்டின் பிரச்சனையும் தீரவில்லை. இந்திய இராணுவமும் வாபஸ்பெறப்படவில்லை. அரசுக்குள் உள்ள சக்திவாய்ந்த சிலர் நாட்டின் பிரச்சனை தீரவதை விரும்பவில்லை. இராணுவ நடவடிக்கைகளையே அவர்கள் விரும்பினர். இந்திய -இலங்கை ஒப்பந்தம் அமுலாவதையும் அவர்கள் விரும்பவில்லை. எனவே பிரச்சனையும் தீரவில்லை. அமைதியும் ஏற்படவில்லை. இந்திய இராணுவம் இந்நாட்டில் தொடர்ந்து இருப்பதற்கு இவர்களே காரணம்.

திரு. தொண்டமான்.



ஜனநாயக ரீதியிலான தலைமைத்துவமே இலங்கைத் தமிழருக்குத்தேவை. இலங்கையில் தமிழருக்கு "ஜனநாயக தலைமைத்துவம்" இல்லாததன் விளைவே இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை அமுலாவதில் தாமதம் ஏற்படக்காரணமாகும். இலங்கை இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஜனநாயக தலைமைத்துவத்திற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆறுவது அரசியலமைப்பு திருத்தமானது ஜனநாயக தலைமைத்துவத்தை தமிழர்கள் மத்தியில் வலுவிழக்கச் செய்துவிட்டது.

திரு. சி. ஆ. பெ. விஸ்வநாதம்

வடக்கு, கிழக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்துமுன், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அம்மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய வேண்டும். அப்படி அம்மக்கள் ஏற்றுக்கொண்டால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு தங்களது கிளர்ச்சியைக் கைவிடவேண்டும்.

*Large discounts (from 10-30% dependent on order value).*

*A small deposit now will freeze the cost at today's prices.*

*Britain's largest and most respected double-glazing company with over one million satisfied customers.*

*Holder of FOUR British Standards Kitemarks and the coveted British Board of Agrément certificate for quality, manufacture and installation.*

*All units incorporate security and insulation features second to none.*

*All units installed by our own highly-trained craftsmen.*

*Ring for a free, no-obligation window-by-window estimate.*

*LOCAL SALES OFFICE :*

**01.886 5966**

*YOU ONLY FIT DOUBLE-GLAZING ONCE. SO FIT THE BEST.*

Everest Double Glazing

GGF A member of the Glass and Glazing Federation.

**Everest**

# CAPITAL AUTOS

* SERVICING
* ELECTRONIC TUNING
* WELDING, RESPRAYS
* PRE MOT CHECKS
* INSURANCE WORK
* ALL MECHANICAL & ACCIDENT REPAIRS
* FREE ESTIMATES

CONTACT:

**N. RATHA**
**(PROPRIETOR)**
**311 SPROWSTON MEWS,**
**FORESTGATE E7**
**(REAR OF 311 ROMFORD ROAD)**
**01-519 6187**




நவீன கருவிகளை உபயோகித்து திருத்தங்கள் செய்துதரப்படும்.

